



# The Trumpet of the Seventh Angel
# ஏழாம் தூதனின் எக்காளம்

1879 - 1916 ரீ-பிரிண்ட்ஸ் தமிழாக்கம்
மலர் - 8, இதழ் - 5, செப்டம்பர் - அக்டோபர் 2022

R5300

## SUPERIORITY OF THE ORIGINAL ABRAHAMIC COVENANT
## ஆபிரகாமின் ஆதி உடன்படிக்கையின் மேன்மை

ஆபிரகாமின் மூன்று மனைவிகளை நிழலாகக் கொண்டு வேத வாக்கியங்கள் மூன்று மாபெரும் உடன்படிக்கைகளை குறிப்பிடுகின்றன. இந்த உடன்படிக்கைகள் அந்த மனைவிகளின் வரிசை முறையில் குறிப்பிடப்படுகின்றன. சாராள் ஆபிரகாமின் முதல் மனைவி – அங்கீகரிக்கப்பட்ட ஒரே மனைவி. அதன்பிறகு சாராளின் அடிமைப் பெண் ஆகார்; பிறகு கேத்தூராள். சாராளுக்கும் ஆகாருக்கும் ஒவ்வொரு மகன். ஆனால் கேத்தூராள் ஆறு பிள்ளைகளை பெற்றிருந்தாள். ஆபிரகாம் ஈசாக்கை தனது வாரிசாக்கினார் (ஆதியாகமம் 25:5) என்றும் இஸ்மயேலும் கேத்தூராளின் பிள்ளைகளும் தங்களுக்குரிய பங்கை பெற்றுக் கொண்டார்கள் என்றும் வேத வாக்கியங்கள் காண்பிக்கின்றன. இஸ்மயேல், ஈசாக்குக்கு முன்பே பிறந்திருந்தாலும், ஈசாக்கு தான் வாரிசு என்பதை மாற்றவில்லை.

மிகவும் ஆரம்பத்திலிருந்தே தேவனுடைய மனதிலிருந்து சபையில் செயல்பாட்டில் இருக்கும் ஆபிரகாமின் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கை. தேவன் ஆபிரகாமுக்கு முன்கூட்டியே சுவிசேஷத்தை பிரசங்கித்தார்.(கலா 3.8) பரிசுத்த பவுல் விளக்குகிறதாவது: "உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்." (ஆதியாகமம் 12:3; 28:14) அதே அப்போஸ்தலர் ஆபிரகாமின் உடன்படிக்கை இரண்டு விதமான வாரிசுகளை உடையதாக கூறுகிறார். "நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை 1. வானத்து நட்சத்திரங்களைப் போலவும், 2. கடற்கரை மணலைப் போலவும் பெருகவே பெருகப் பண்ணுவேன்." (ஆதியாகமம் 22:17) இங்கே ஆபிரகாம் தேவனுக்கு நிழலாக காண்பிக்கப்பட்டு, வாக்குத்தத்தமானது, 1. ஆவிக்குரிய நிலையில் கிறிஸ்து மற்றும் சபையையும், 2. மாம்சீக நிலையில் மனுக்குலத்தின் மறுசீரமைப்பு வகுப்பார் என்றும் காண்பிக்கிறது.

இந்த இரண்டு சந்ததிகளையும் பரிசுத்த பவுல் ரோமர் 4:16,17 இல் குறிப்பிட்டு ஒன்று விசுவாசத்தின் கீழாகவும் மற்றது நியாயப்பிரமாணத்தின் கீழாகவும் கிரியை செய்வதாக கூறுகிறார். முதலாவது ஆவிக்குரிய சந்ததி, இந்த சுவிசேஷ யுகத்தில் அபிவிருத்தி அடைந்து கொண்டிருக்கிறது. இரண்டாவது மாம்சீக சந்ததி, மறுசீரமைப்பு சந்ததி (சுவிசேஷ யுகத்துக்கு முன்னரே அபிவிருத்தி அடைந்த பழைய ஏற்பாட்டுகால பாத்திரவான்களைத் தவிர்த்து) புது உடன்படிக்கைக்கு கீழாகவும் அதன் மத்தியஸ்தர் மூலமாகவும் வெறும் விசுவாசத்தினால் அல்ல பிரமாணம் மற்றும் கிரியை மூலமாக அபிவிருத்தி அடையும்.

சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்ட நியாயப்பிரமாணம் புதிய உடன்படிக்கைக்கு ஒரு நிழலாக இருந்தது. தேவனுடைய மனிதனாகிய மோசேயை அதன் மத்தியஸ்தராக பெற்றிருந்தது. இந்த உடன்படிக்கை எதையும் பரிபூரணத்திற்கு கொண்டு வரவில்லை. அதன் மத்தியஸ்தரும் கொண்டு வரவில்லை. அதன் மத்தியஸ்தரும் ஜனங்களும் அபூரணராகவே இருந்தனர். பரிசுத்த பவுல், இஸ்ரயேலர்கள் இஸ்மயேலின் மூலம் நிழலாக காண்பிக்கப்பட்டு, ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் கிறிஸ்துவோ (இயேசு + சபை) அதைப் பெற்றக்கொண்டார் என்று விளக்குகிறார். எனினும் பிற்பாடு இஸ்ரயேலர்கள் ஆசீர்வாதத்தை பெறுவார்கள் என்றும் அந்த ஆசீர்வாதம் சபை மகிமையடைந்த பிறகு புதிய உடன்படிக்கையின் மூலம் கொண்டுவரப்படும் என்றும் அப்போஸ்தலர் குறிப்பிடுகிறார்.

ஆபிரகாமின் உடன்படிக்கை தெய்வீக வாக்குத்தத்தத்தை முழுமையாக உடையதாக இருந்தால் அதாவது சபைக்கும் மற்றும் உலகிற்கும், பிறகு தேவன் ஏன் மோசேயை மத்தியஸ்தராக கொண்ட நியாயப்பிரமாண உடன்படிக்கையை சீனாய் மலையில் இஸ்ரயேலருடனும், அதைத் தொடர்ந்து முழு உலகமும் ஆசீர்வதிக்கப்படக் கூடிய புதிய உடன்படிக்கைகளையும் ஏன் ஏற்படுத்த வேண்டும் என்ற கேள்வி எழுகிறது.

### கூட்டப்பட்ட உடன்படிக்கைகளின் நோக்கம்

தெய்வீக நோக்கத்தை தெளிவுபடுத்தவும், தெய்வீக அன்பு மற்றும் நீதியின் செயல்பாடுகளை நாம் உணர்ந்து கொள்ள உதவவும் இந்த இரண்டு உடன்படிக்கைகளும் கூட்டப்பட்டன என்று நாங்கள் பதிலளிக்கிறோம்.

(1) வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததி வரும்வரை, நியாயப்பிரமாண உடன்படிக்கை ஆபிரகாமின் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கையுடன் கூட்டப்பட்டது என்று பரிசுத்த பவுல் விளக்குகிறார். உடன்படிக்கை அவருக்கே பொருந்துகிறது. பாவங்களினிமித்தம் அது தேவையாயிருந்தது. சந்ததிக்கான உயர்ந்த தெய்வீக திட்ட அளவு காண்பிக்கப்பட அது (நியாயப்பிரமாண உடன்படிக்கை) தேவையாயிருந்தது. இஸ்ரயேலுடனான நியாயப்பிரமாண உடன்படிக்கை இந்த ஊழியத்தை வழங்கியது. ஏனெனில் இது இயேசுவை அங்கீகரித்த மற்றும் மற்ற அனைவரையும் கண்டித்த ஒரு திட்ட அளவை அமைத்தது. இது யூத தேசம் தேவனுடனும் நீதியுடனும் அபிவிருத்தி அடையவும், அவர்களில் சிலர் சுவிசேஷ யுகத்தின் மகிமையான பரம அழைப்புக்கு தயார்படுத்தி தகுதிப்படுத்தவும் உதவியது. அது முடிவாக அவர்களை தெய்வீக கிருபைக்கும் ஆயிர வருட ராஜ்யத்தில் மேசியாவின் உடன்சுதந்தரராகவும் தெய்வீக கிருபைக்கும் அழைத்தது.

நியாயப்பிரமாணமானது இந்த சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மிகவும் நன்மை

பயக்கக்கூடிய நிழலான பரிவர்த்தனைகளையும் தீர்க்க தரிசனங்களையும் கூட கொடுத்தது. நியாயப்பிரமாணத்தின் இந்த நிழல்களிலும் மாதிரிகளிலும் நமக்கு விளக்கி, இந்த சுவிசேஷயுகத்தில் சபைக்கும் அடுத்த யுகத்தில் உலகத்திற்கு ஆசீர்வாதங்களாக தோன்றுகிற பல்வேறு காரியங்களையும் பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்களையும் நமக்கு விவரிக்கிறது.

(2) ஆபிரகாமின் ஆதி உடன்படிக்கையோடு இரண்டாவதாக சேர்க்கப்பட்ட புதிய உடன்படிக்கையின் மூலம் உலகமானது மறுசீரமைப்பில் பெறப்போகிற சகல ஆசீர்வாதங்களையும் கிருபைகளையும் விளக்குகிறது. புதிய உடன்படிக்கையானது இன்னும் ஆரம்பிக்கவில்லை. ஏனெனில் அதை ஆரம்பிக்க வேண்டிய வரும் ஆயிரம் வருட யுகத்தில் ஆதாமின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் கிடைக்க காரணமானவருமாகிய மத்தியஸ்தரானவர் அதை நிறைவு செய்யவில்லை. இந்த புதிய உடன்படிக்கையானது இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் ஆரம்பிக்கப்பட்டு, அதன்வேலை ஆயிர வருட யுகம் முழுவதும் நடைபெறும்.

நமது இரட்சகரும் தலையானவருமாகிய இயேசு கல்வாரியில் கொடுத்த தமது சொந்த பலியின் புண்ணியத்தினால் புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறார். பிதாவானவர், பழைய ஏற்பாட்டு பாத்திரவான்களைக் காட்டிலும், "விசேஷித்த நன்மையான தொன்றை நமக்கென்று" தேவன் நியமித்திராவிட்டால் இயேசு அதை முத்திரையிட்டு ஆரம்பித்திருப்பார். மத்தியஸ்தரின் சரீரத்தை அபிவிருத்தி செய்வதற்காக சுவிசேஷ யுகம் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறது என்பது ஒரு இரகசியம். (எபேசியர் 3:3-6; கொலோசெயர் 1:27)

## ஆணையின் பிள்ளைகள்

நமது கர்த்தர் தான் மேசியா என்றும் நீண்ட காலமாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் சந்ததி என்றும் வேதவாக்கியங்கள் காண்பிக்கின்றன. (லூக்கா 1:32, 33, 55,72-74; 2:11; யோவான் 1:41; 4:25,26) ஒரு ஆணையினால் தேவன் உறுதிப்பண்ணின ஆபிரகாமின் ஆதி உடன்படிக்கையின் கீழ் "அவரது (இயேசுவின்) சரீரமாகிய சபையும்" கூட அபிவிருத்தி பண்ணப்படுகிறது. பரிசுத்த பவுல் அதை "நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாக போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது" என்று கூறுகிறார். (எபிரேயர் 6:13-20) மறுபடியும் அவர் சபைக்கு கூறுகிறதாவது: "சகோதரரே நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்து பிள்ளைகளாயிருக்கிறோம்." (கலா.4:28) சபைதான் ஆணையின் பிள்ளைகளாக இருக்கிறார்கள்.

ஊழியக்காரரின் வீட்டை அமைக்கிற யூதர்களைக் காட்டிலும் புது சிருஷ்டியாகிய நமக்கு கிறிஸ்து மூலம் கொடுக்கப்பட்டிருக்கிற நமது ஜெனிப்பித்தலின் வாக்குத்தத்தம் முற்றிலும் வேறானது. புது உடன்படிக்கை அல்லது கேத்தூராளின் பிள்ளைகளைப் போல மறு சீரமைப்பின் செயல்பாடு மூலமாக மனுக்குலம் பூரணத்திற்கு கொண்டு வரப்படபோகிற பூமியின் சகல வம்சங்களும் மற்றும் புதுப்பிக்கப்பட போகிற அந்த வாக்குத்தத்தங்களைக் காட்டிலும் வேறானது. ஆபிரகாமின் உடன்படிக்கையின் கீழ் நமது கர்த்தர் அபிவிருத்தி அடைந்தது போல சபையும் கூட அந்த உடன்படிக்கையின் கீழ் அபிவிருத்தி அடைய வேண்டும். ஏனெனில் ஆவிக்குரிய சந்ததி இரு தாய்களின் குழந்தையாக இருக்க முடியாது. எழுதப்பட்டுள்ளதாவது: "ஈசாக்கிடம் உன் சந்ததி விளங்கும்." (ஆதியாகமம் 21:12)

## புது உடன்படிக்கை நித்தியமானது

உலகமானது, ஆயிரம் வருட யுகத்தின் ஆரம்பத்தில் தனித்தனியாக தேவனுடன் புது உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைய மாட்டார்கள். அந்த யுகத்தின் முடிவிலே தான் அவ்விதம் நடைபெறும் என்பது தெளிவாகிறது. அந்த காலப்பகுதி முழுவதிலும் காரியங்கள் கண்டிப்பாகவும் தனியாகவும் மத்தியஸ்தரின் கைகளில் இருக்கும். அந்த காலப்பகுதியில் தனித்தனியாகவும், மொத்தமாகவும் மனுக்குலத்தை உயர்த்த (விருப்பம் உள்ளவர்களை) தேவனுடைய நித்திய ஜீவனுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் தகுதியுள்ளவர்களாக ஆக்குவார். அதன்பிறகு ஆயிரம் வருட முடிவே கிறிஸ்துவின் மத்தியஸ்தத்தின் முடிவாக இருக்கும் என்பதை நாம் தெளிவாக காண்போம். இது உலகத்தின் ஒவ்வொருவரும் புது உடன்படிக்கையின் தனிப்பட்ட சொந்த உறவை அர்த்தப்படுத்துகிறது.

நாம் கவனிக்க வேண்டிய இன்னொரு கருத்தும் உண்டு. அதாவது ஆயிரம் வருட யுகத்தில் ஆரம்பிக்கிற அதே புதிய உடன்படிக்கை நித்தியத்துக்கும் தொடரும். கிறிஸ்துவின் ஆளுகையின் ஆயிரம் வருட முடிவில் இன்னுமொரு புது உடன்படிக்கை இராது. இந்த புதிய உடன்படிக்கை தேவனுக்கும் மனிதனுக்கும் நேரடியாக செயல்படாமல் மத்தியஸ்தர் மூலமாகவே செயல்படும். இந்த உடன்படிக்கையில் தேவன், இனி உலகத்தின் பாவங்களையும் அநீதிகளையும் நினைக்கவே மாட்டார் என்பதையும், தனிப்பட்ட முறையில் அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களுக்கான அதே ஆசீர்வாதங்களையே அவர்கள் பெறுவார்கள் என்பதையும் ஒப்புக் -கொள்ளுகிறார். அவர்கள் அவர்களது பிரதிநிதியும் மத்தியஸ்தருமாகிய கிறிஸ்து (இயேசு + சபை) மூலமாக ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.

ஆயிரம் வருட யுகத்தில் அகில உலகமும், இஸ்ரயேல் தேவனுடன் உடன்படிக்கையின் உறவுக்குள் இருந்த அதே மாதிரி மத்தியஸ்தர் மூலமாக உடன்படிக்கையின் உறவுக்குள் இருக்கும். மோசேயின் மரணத்திற்கு பின்பும் நியாயப்பிரமாண உடன்படிக்கை தொடர்ந்தது. அதே போல் கிறிஸ்துவின் வேலை முடிந்த பிறகும் கூட இந்த புதிய உடன்படிக்கை தொடரும். முழு உலகமும், அந்த உடன்படிக்கையின் ஏற்பாட்டிற்கு கீழ் இருக்கும். ஆனால் தேவன் அவர்களை முடிவாக ஏற்றுக்கொள்ளுவதற்கு முன்பு அவர்களில் எவ்வளவு பேர் நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பதைக் காண அவர்களுக்கு சோதனையை கொடுப்பார். ஆகையால் ஆயிரம் வருடத்தின் முடிவில் வருகிற சோதனை தேவனால் கொடுக்கப்படுவதாகவும், அவருடனான நித்திய காலமான உடன்படிக்கையின் உறவுக்குள் நுழைவதற்கான தகுதியை நிரூபிப்பதற்காகவும் ஆகும். அவர்கள் ஒரு தேசமாகவோ அல்லது ஒரு ஜாதியாகவோ சோதிக்கப்படாமல் அவர்கள் தனித்தனியாக இந்த உடன்படிக்கையின் உறவுக்கான சொந்த உரிமையை நிரூபிக்க வேண்டும். இந்த புதிய உடன்படிக்கையின் உறவு தகப்பனாகிய ஆதாமின் கீழ்ப்படியாமையினால் பாழ்படுத்தப்பட்ட ஆரம்ப உறவுக்கு ஒப்பானதாக இருக்கும்.

ஆயிரம் வருட மேசியாவின் ஆளுகை முழுவதும் மனித வம்சம் முழுவதும் மத்தியஸ்தராக அவரது முழு கட்டுப்பாட்டில் இருக்கும். அவருடைய பிரமாணங்களும் அவரது ஏற்பாடுகளும் யேகோவாவினுடையவைகளுக்கு முழுவதும் இசைவானதாக இருக்கும். அதுவே முழு செயல்பாட்டில் இருக்கும். யேகோவாவின் நேரடியான ஏற்பாடுகளைக் காட்டிலும் அவை மிகவும் சாதகமானதாக இருக்கும். ஏனெனில் மனுக்குலம் அபூரணமாக இருந்து, பூரணமான சிந்தனை மற்றும் வார்த்தை மற்றும்

கிரியைகளில் கொஞ்ச காலம் சக்தியற்றதாக இருக்கும். மேலும் யேகோவாவின் பிரமாணம் எந்த விதத்திலும் பாவத்தை அங்கீகரிக்காது.

மத்தியஸ்தர், விருப்பம் உள்ள அனைவரையும் உயர்த்துவதற்காக மனுக்குலம் முழுவதையும் அவரது கட்டுப்பாட்டிலும் ஒழுங்குகளிலும் வைத்திருப்பார். கீழ்ப்படியாதவர்களை இரண்டாம் மரணத்தில் அழிக்கக் கூடிய உரிமையையும் இது உள்ளடக்கியிருக்கும். அவர் இந்த காரியத்தில் முழுமையான எதேச்சாதிகார அதிகாரத்தையும் அப்பியாசப்படுத்தக் கூடியவராக இருப்பார். அவரைத் தவிர யாரும் அதிகாரம் உடையவர்களாக இருக்க மாட்டார்கள். குமாரனானவர் உலகத்தை வாங்கினவராக, அந்த ஆயிரம் வருடங்களில் ஒரு எதேச்சாதிகாரியாக இருப்பார். ராஜ்யம் ஒரு நிர்ப்பந்தமான இராஜ்யமாக இருக்கும். உலகத்தை நீதியில் சரிபடுத்துவதற்கும் பூரணப்படுத்துவதற்கும் இது அவசியமாயிருக்கும்.

## ஒரு முழுமையான சோதனை அனைவருக்கும் உத்தரவாதம் பண்ணப்பட்டிருக்கிறது

முதலாவது சோதனையில் ஆதாமின் தோல்வியினால் பெற்றிருந்த காயத்திலிருந்து முழுமையாக விடுதலை பெற்றவர்களாக மனுக்குலமானது நித்திய ஜீவனுக்கான இன்னும் ஒரு தனிப்பட்ட சோதனையை பெற்றிருக்கும் என்று தேவன் ஆரம்பத்திலிருந்து நோக்கங் கொண்டிருந்தார் என்று வேதவாக்கியங்கள் தெளிவாக கூறுகின்றன. நீதியானது இதை அனுமதிக்கும்படியாக இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த முடிவுக்காக கிறிஸ்து, “ஒவ்வொருவருக்காகவும் மரணத்தை ருசி பார்த்தார்.” அவர் “எல்லாரையும் மீட்கும் பொருளாக தம்மை ஒப்புக்கொடுத்தார். இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கி வருகிறது.” தற்கால யுகமே சிலருக்கு ஏற்ற காலம். மற்றவர்களுக்கு மேசியாவின் யுகமே ஏற்ற காலமாக இருக்கும்.

கிறிஸ்துவின் ஆளுகையில் ஆயிரம் வருடத்தில் மரிக்கிறவர்கள் முழு சோதனையை பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் மனம் மாறாதவர்களாகவும், அவர்களது சித்தம் சரியில்லாதவர்களாகவும் இருப்பார்கள். ஆனால் யாரும் அறியாமையினாலும் தவறான புரிந்து கொள்ளுதலினாலும் அழிந்து போகக் கூடாது என்று தேவன் நோக்கம் கொண்டிருக்கிறார். ஆகையால் எல்லாரும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் (1 தீமோத்தேயு 2:3-6) கீழ்ப்படிகிறவர்கள் அனைவரும் இரட்சிக்கப்படும்படியும் முழு ஏற்பாடு செய்திருக்கிறார். இந்த முழு சந்தர்ப்பம் கிறிஸ்துவின் ராஜ்யத்தின் மூலம் எல்லாருக்கும் கொண்டு வரப்படும்.

மேசியாவின் ஆளுகையின் கீழ் சிலர் பூரணத்திற்கு முழுமையாக வராமல், இன்னும் அபூரணராகவே இருந்து நூறு வயதில் மரித்தால், அப்படிப்பட்டவர்கள் முழு சோதனையை பெற்றிருந்தார்கள் என்று எப்படி சொல்ல முடியும்? அவர்கள் விருப்பம் உள்ளவர்களாக இருந்தால், கிறிஸ்து அவரது மத்தியஸ்த ராஜ்யத்தில், அவர்கள் விழுந்து போன நிலைமையிலிருந்து வெளியே வர உதவி செய்வார் என்பது ஒவ்வொரு மனுக்குல அங்கத்திற்கும் தேவன் ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதே நமது பதில். அவர்கள் தெய்வீக சித்தத்தை ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதே தேவைப்படுகிற நிபந்தனை. சத்தியத்தில் தெளிவான அறிவுக்கு வந்த பிறகு, அவர்களது அபூரணத்தினால் வருகிற அனைத்து தோல்விகளிலும் சலுகை அளிக்கப்பட்டு, அவர்களது பலவீனத்திலிருந்து வெளியேற சகலரும் உதவியளிக்கப்படுவார்கள். இப்படிப்பட்ட அறிவு மற்றும் சந்தர்ப்பத்தின் கீழ் தெரிந்து பாவம் செய்கிறவர்கள், முழு அறிவையும் திறமையையும் பெற்றாலும் அதையே செய்வார்கள்.

இந்த கடைசி வகுப்பார் சாத்தான் மற்றும் பாவத்தின் தூதர்கள் என்றும் அல்லது தூதுவர்கள் என்றும் சொல்லப்படுகிறார்கள். ஏனெனில் தெய்வீக ஏற்பாடுகளுக்கு எதிராக வேண்டுமென்றும் அறிவுடனும் பாவம் செய்கிறவர்கள் சாத்தானின் ஆவியை உடையவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கீழ்ப்படியாமையின் சித்தங்களை அபிவிருத்தி செய்கிற அனைவரும் இரண்டாம் மரணத்திற்கு செல்வார்கள். வேறு எதுவுமே அவர்களுக்கு இல்லை. அறிவுடனும் சந்தர்ப்பத்துடனும் தேவனுடன் இணக்கத்திற்கு வருவதிலும் சத்தியம் மற்றும் நீதியின் வழியில் நடப்பதிலும் சந்தோஷப்படுகிறவர்களை விடுவிக்கும் நோக்கமே முழு இரட்சிப்பின் திட்டமாக இருக்கிறது.

## சுருக்கமாக மாபெரும் மூன்று உடன்படிக்கைகள்

முன்பே சொல்லப்பட்டபடி ஆபிரகாமின் உடன்படிக்கையோ கால வரிசையிலும் முக்கியத்துவத்திலும் முதலாவதாக இருக்கிறது. இந்த உடன்படிக்கை இரண்டு பாகங்களை உடையதாக இருக்கிறது. முதலாவதானது ஈசாக்கை நிழலாக கொண்ட ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததி, தலையும் சரீரமும் சேர்ந்த கிறிஸ்து. இன்னொரு உருவகத்தில் ஈசாக்கும் ரெபேக்காளும் ஆகும். இவர்கள் தான் ஆபிரகாமின் சந்ததி, வாக்குத்தத்தின் சந்ததி, மாம்சத்துக்குரியதல்ல, ஆனால் ஆவிக்குரியது.

உடன்படிக்கையின் இரண்டாவது பாகம், “பூமியின் சகல வம்சங்களாகிய” உலக மனுக்குலத்தை குறிக்கிறது. இவர்கள் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாக, வாரிசுகளாக, அவருடன் பூமியும் அதன் நிறைவுமாக ஆகக்கூடியவர் -களாகவும், ஆவிக்குரிய சந்ததியினரால் ஆசீர்வதிக்கப்பட வேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தி, மேசியாவின் ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் போது குறிப்பிடப்பட்டிருக்கிற தெய்வீக ஏற்பாடுகளுக்கு கீழ்ப்படிவதே தேவனுடைய கிருபையை அடையவும், இழந்து போன அனைத்தையும் திரும்ப பெறுவதற்கான நிபந்தனையாகும்.

சீனாய் மலையில் ஏற்படுத்தப்பட்ட நியாயப்பிரமாண உடன்படிக்கை அல்லது சுவிசேஷ யுக முடிவில் இஸ்ரயேலரோடு ஏற்படுத்தப்போகிற புது உடன்படிக்கையை பொருட்படுத்தாத இந்த ஆபிரகாமின் உடன்படிக்கையின் சட்டப்பூர்வமான வாரிசாக ஆபிரகாமின் சந்ததியாக இயேசுவும் சபையும் இருக்கிறார்கள்.

இந்த ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு மத்தியஸ்தர் இல்லை. ஆனால் நியாயப்பிரமாண உடன்படிக்கை மோசேயை மத்தியஸ்தராக பெற்றிருந்தது; புதிய உடன்படிக்கை ஆபிரகாமின் உடன்படிக்கையின் வாரிசாகிய மேசியாவை மத்தியஸ்தராக கொண்டிருக்கும்.

ஆபிரகாமின் உடன்படிக்கைக்கு மத்தியஸ்தர் தேவைப்படவில்லை. ஏனெனில் அங்கே மத்தியஸ்தம் தேவைப்படுகிற நிபந்தனைகள் ஏதுமில்லை. தேவன் தமது சொந்த குறிப்பிட்ட தெரிந்தெடுக்கும் முறைகள் மூலம் ஆபிரகாமின் சந்ததியை கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் இதை சும்மா அறிவித்தார். மற்ற மனுக்குலத்தின் சம்பந்தமாக இந்த சந்ததியை ஆசீர்வதிக்கவும் கனப்படுத்தவும் ஆகும். அப்போஸ்தலர் குறிப்பிடுவது போல இந்த விசேஷமாக தெரிந்து கொள்ளப்பட்ட ஆபிரகாமின் சந்ததி கிறிஸ்துவும் சபையுமாகும். (கலாத்தியர் 3:8,16,29; ரோமர் 3:29,30)

### ஆவிக்குரிய சந்ததியின் தேவனுடைய தேர்வு

இந்த மேசியாவின் கூட்டத்தாரை அமைப்பதற்கு அவருக்கு பிரியமானவர்களும் பாத்திரவான்களுமானவர்களை தெரிந்துகொள்ளுவதற்கு தேவன் சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார். இவர்களை கண்டுபிடிக்க அவருடைய ஏற்பாடுகள் வேதவாக்கியங்களால் காண்பிக்கப்பட்டிருக்கின்றன. ஆபிரகாமின் அந்த சந்ததியில் அங்கத்திற்கான சுவிசேஷ யுகத்தின் அழைப்பைக் குறித்து அவை கூறுகிறதாவது: "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணிட என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்." (சங்கீதம் 50:5) மாம்சீக சுதந்தரங்கள், சலுகைகள் மற்றும் உரிமைகள் அனைத்தையும் மற்றும் மானிட சித்தத்தையும் பலியிடுகிற இந்த உடன்படிக்கை மிகவும் ஒரு கடுமையான சோதனையை நிரூபிக்கிறது. அதோடு கூட ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிற மிகவும் விசேஷித்த ஜனங்கள் என்று கர்த்தரிடம் மெய்ப்பிக்கிறது. அவர்கள் மாம்சத்தையும் அதன் சகல உரிமைகளையும் மற்றும் சுதந்தரங்கள் அனைத்தையும் மரண பரியந்தம் கைவிட்டு ஆவிக்குரிய சந்ததியாக ஆகிறார்கள்.

இந்த சந்ததியின் தலையானவர் முழு சரீரத்துக்கும் ஜீவனை உடையவராக இருக்கிறார். அவருடன் இணைக்கப்படுகிற அனைத்து அங்கங்களும் அவரது புண்ணியத்தால் நீதிமானாக்கப்படுவது முதல் தேவையாக இருக்கிறது. எதையும் பூரணமாக்காத நியாயப்பிரமணா உடன்படிக்கையின் கீழ் இவர்கள் நீதிமானாக்கப்படவில்லை; ஏனெனில் அது இன்னும் நிறைவடையவில்லை. ஆனால் விரைவில் இஸ்ரயேலுக்கும் உலகத்திற்கும் புது உடன்படிக்கையை முத்திரையிடுவதற்கு பலனளிக்கப் போகிற இரத்தமானது, இப்பொழுது மத்தியஸ்தரின் சரீரமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறவர்களை நீதிமான்களாக்குவதற்கு பலனளிக்கக் கூடியதாக இருக்கிறது. இது சாத்தியமாகும். ஏனெனில் இந்த சரீர அங்கங்கள் மீதமுள்ள அதே மனித குடும்பத்திலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆகையால் விரைவில் உலகிற்கு புது உடன்படிக்கையை முத்திரையிட்டு செயல்பாட்டுக்கு கொண்டுவரப்போகிற அதே இரத்தம் தான் அல்லது கிறிஸ்துவின் புண்ணியம் தான் இப்பொழுது பரிசுத்தவான்கள் என்றும் கிறிஸ்துவின் உடன் சுதந்தரர் என்றும் அழைக்கப்படுகிறவர்கள் அனைவரையும் இலவசமாக நீதிமானாக்குகிறது.

### இரண்டாவது மற்றும் மூன்றாவது உடன்படிக்கைகள் – நிழலும் பொருளும்

இரண்டாவது உடன்படிக்கை, கால வரிசைப்படி நியாயப்பரமாண உடன்படிக்கை ஆகும். (யாத்திராகமம் 19:3-8) இது ஆபிரகாமின் உடன்படிக்கையோடு கூட்டப்பட்டது. இந்த கூட்டப்படுதல் ஆதி பிரமாணத்தை குறுக்கீடு பண்ணாது. அது நிழலானது. அது ஒரு நிழலான மத்தியஸ்தரையும், ஆடு, மாடுகளில் நிழலான பலிகளையும், நிழலான பாவநிவாரண நாள், நிழலான பரிசுத்த ஸ்தலம் மற்றும் மகா பரிசுத்த ஸ்தலத்தையும் பெற்றிருந்தது.

மூன்றாவது மற்றும் கடைசியானது எதிர்காலத்தில் ஏற்படுத்தப்பட போகிற புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கை (எரேமியா 31:31-34; எபிரேயர் 8: 6-13) இது ஆதி ஆபிரகாமின் உடன்படிக்கையை ஒதுக்கி வைத்து செல்லாததாக்க முடியாது. சீனாய் மலையின் நியாயப்பிரமாணமும் அதை செல்லாததாக்க முடியாது. ஆபிரகாமின் உடன்படிக்கை, ஆபிரகாமின் சந்ததியை கொண்டு வந்து, அவரை கனம், மகிமை மற்றும் தெய்வீக மாட்சிமையினால் அலங்கரிக்கப்படும் வரை புதிய நியாயப்பிரமாண உடன்படிக்கை அறிமுகப்படுத்தப்படவோ முத்திரையிடப்படவோ, செயல்படுத்தவோ முடியாது. பிறகு தலையும் சரீரமும் இணைந்த முழு கிறிஸ்துவாகிய மெய்யான மோசே ஓர் ஆயிரம் வருடம் தேவனுக்கும் மனிதருக்கும் இடையே மத்தியஸ்தம் பண்ணுவார்.

இந்த புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களுக்கு மேசியாவின் புண்ணியமே அடிப்படையாக இருக்கும். முதலாவது தலையும் சரீரமும் சேர்ந்து ஆபிரகாமின் முழு சந்ததி நிறைவடையும் வரை, இந்த புண்ணியம் மறுசீரமைப்பின் ஆசீர்வாதங்களுக்காக உலகத்தின் சார்பாக சமர்ப்பிக்கப்படுவதோ அல்லது மாம்சீக இஸ்ரயேலருக்கும், மனுக்குலத்திற்கும் புது உடன்படிக்கையை முத்திரையிடுவதோ நடைபெறாது; அனைத்து பலிகளும் நிறைவடையும் வரை அது முடிவடையாது. தலையானவரின் பலி பதினெட்டு (தற்போது பத்தொன்பது) நூற்றாண்டுகளுக்கு முன்பு நிறைவேறியது. அது இஸ்ரயேலின் பாவ நிவாரண நாளின் காளையால் நிழலாக காண்பிக்கப்பட்டது. அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற அவரது அம்சங்கள், அர்ப்பணம் செய்த சபையின் பலி இப்போது கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது பாவ நிவாரண நாளின் பலிகளில் ஆட்டின் பலியால் நிழலாக காண்பிக்கப்பட்டது.

மேசியா, சுவிசேஷ யுகத்தின் தன் பலியின் வேலைகள் அனைத்தையும் முடிக்கும் வரை, அவரது கடைசி அங்கத்தினர் மாம்சீக நிலைமையிலிருந்து பரலோக நிலமைக்கு செல்லும் வரை, முழு கிறிஸ்துவின் பாடுகள் நிறைவடையாது. அதுவரை மேசியாவின் ராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அவர் அறிமுகப்படுத்தமாட்டார். அவரது பலியின் புண்ணியத்தை மனுக்குலத்தின் சார்பாக அப்பியாசப்படுத்துவதின் மூலம் அந்த ஆசீர்வாதங்களை உறுதிப்படுத்துவார்.

**R5302**

## "LABORERS TOGETHER WITH GOD"

## "தேவனுக்கு உடன் வேலையாட்கள்"

"நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்கள்."– (1 கொரிந்தியர் 3:9)

இந்த சுவிசேஷ யுகத்தில் தேவனால் ஏற்பாடு செய்யப்பட்டு அவரால் நிறைவேற்றப்படக் கூடிய வேலை உண்டு. அது ஆபிரகாமின் சந்ததியை தேர்ந்தெடுக்கிற வேலையாகும். இந்த சந்ததிக்கான முதல் சந்தர்ப்பம் ஆபிரகாமின் மாம்சீக சந்ததியாகிய, மாம்சீக இஸ்ரயேலருக்கு கொடுக்கப்பட்டது. அவர்களிலிருந்து ஒரு தெரிந்து கொள்ளப்பட்ட கூட்டத்தை சேர்ப்பது முடிவடைந்திருக்கிறது. இந்த வேலையின் இந்த பகுதி முடிவடைந்த பிறகு யூத தேசம் ஒதுக்கி வைக்கப்பட்டு, இந்த வேலை கடந்த பத்தொன்பது நூற்றாண்டுகளாக புற ஜாதிகளிலிருந்து தேர்வு செய்வது தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

"இஸ்ரயேல் தேடுகிறதை அடையாமலிருக்கிறார்கள்; தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ அதை அடைந்திருக்கிறார்கள்; மற்றவர்கள் இன்றைய தினம் வரைக்கும் கடினப்பட்டிருக்கிறார்கள்." இந்த கடினப்படுதல் தெரிந்துகொள்ளப்பட்ட வகுப்பாரில் மீதமுள்ள அங்கங்களை தெரிந்தெடுத்தல் முடிவு பெறும் வரை இருக்கும்; அதன் பிறகு மாம்சீக இஸ்ரயேலருக்கு தேவ கிருபை திரும்பும். "இந்தப் பிரகாரம் இஸ்ரயேலர் எல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபை விட்டு விலக்குவார் என்றும், நான் அவர்களுடைய பாவங்களை நீக்கும் போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது." தெரிந்து

கொள்ளப்படுதலில், சிலரைத் தவிர இஸ்ரயேல் தோல்வியடைந்தது. எனினும் பிதாக்களின்நிமித்தம் இன்னும் அன்புகூரப்பட்டவர்களாக இருக்கிறார்கள். (ரோமர் 11:7, 26-28)

சுவிசேஷ யுகத்தின் ஒரு வேலை ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியை தெரிந்தெடுப்பதாகும். இவர்கள் மூலமாக பூமியின் சகல வம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும். ஆசீர்வதிக்கப்படபோகிற இவர்கள் பூமிக்குரிய சந்ததியாவார்கள். பூமியின் சகல வசம்சங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்கிற வாக்குத்தத்தம் ஆவிக்குரிய சந்ததி நிறைவடையும் வரை நிறைவேறாது. "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிராகாமின் சந்ததியாயும் வாக்குத்தத்தத்தின்படி சுதந்தரராகவும் இருக்கிறீர்கள்." ஆனால் ஒரு வேலை ஆரம்பத்திலிருந்து முடிவு வரை இருக்கும். நாம் வாசிக்கிறதாவது: "விதைக்கிறவன் ஒருவன் அறுக்கிறவன் ஒருவன். நீங்கள் பிரயாசப்பட்டு பயிரிடாததை அறுக்க நான் உங்களை அனுப்பினேன். மற்றவர்கள் பிரயாசைப்பட்டார்கள். அவர்களுடைய பிரயாசத்தில் பலனை நீங்கள் பெற்றீர்கள்." (யோவான் 4:35-38) அது ஆரம்பமாக இருந்தாலோ அல்லது இப்போது முடிவாக இருந்தாலோ, அறுவடை காலம் எல்லாம் ஒரு வேலையாக இருக்கிறது. தெரிந்து கொள்ளப்பட்டவர்களை கூட்டிச் சேர்த்தல் என்ற ஒரு நோக்கம் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது.

### மனிதாபிமான வேலை

நாம் ஏன் மனிதாபிமான வேலைகளில் மருத்துவமனை கட்டுதல், ஏழைகளை கவனித்தல், குடிசைப் பகுதி வேலை முதலானவைகளில் ஈடுபடுவதில்லை என்று கேட்டால், நமது பதில் நாம் ஈடுபடுகிறோம் என்பதே. இந்த வேலைகளை செய்யக்கூடிய அநேக முகவர்கள் நாடு முழுவதும் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும், தேசத்திலும் ஏழைகளுக்கான சத்திரம் இருக்கின்றன. வியாதியஸ்தர்களையும், குருடர்களையும் மருத்துவமனைகள் பார்த்துக் கொள்ளுகின்றன. அதற்கு தேவையான பணத்தை அரசாங்கம் தருகிறது. அது குடிமக்களிடமிருந்து வருகிற பணமாக இருக்கிறது. ஏழைகளுக்கான சில அதிகப்படியான வேலையைச் செய்தால் அதற்கான சலுகையையும் உரிமையையும் பெற்றிருக்கிறார்கள்.

நாம் மனிதாபிமானம் உடையவர்களாக இருப்பது நமது கடமை என்று நம்புகிறோம். நமது நாட்டின் சட்டங்கள் மனிதாபிமானத்திற்கு உரியவைகளாக இருக்கின்றன. நியூயார்க் முதல் தரமான மாகாணம், நாம் பென்சில் வேனியாவில் இருந்தோமானால் நாம் இதையே சொல்லக்கூடும். இந்த நாட்டில் எல்லா மாகாணமும் இப்படியே இருக்கின்றன என்று அறிகிறோம். இந்த மனிதாபிமான முயற்சிகளைப் பொருத்தவரை, அதில் அதிகமாக நாங்கள் ஈடுபடாததற்கு காரணம், அவைகளெல்லாம் அரசாங்கத்தின் "அதிகாரத்தின்படியும்" ஜனங்களின் விருப்பத்தின்படியும் சரியாக நிர்வகிக்கப் -படுகின்றன என்பதாலேயே ஆகும். மாறுபாடாக சிந்திக்கிற ஒருவர் பெரும்பாலானவர்களைக் காட்டிலும் வேறு கருத்துக்களை கொண்டிருக்கிறார். இந்த பிரச்சினைகளை அணுகுவதில் பெரும்பாலனவர்களோடு நாம் இருக்கிறோம். ஏனெனில் சரியானபடி அவை அணுகப்படுகின்றன. நாம் குறிப்பாக சேரி வேலைகளில் ஏன் ஈடுபடுவதில்லை? அது நமது வேலையல்ல என்று நாம் புரிந்து கொண்டிருக்கிறோம். பெரும்பாலான -வர்களைக் காட்டிலும் இந்த வகையில் நாம்மால் சிறப்பாக செய்ய முடியாது. இந்த காரியங்களில் நாம் குறுக்கிட்டோமானால் நாம் சட்டங்களின் மேல் நம்பிக்கையில்லாதவர்களாக அது காண்பிக்கும். நாம் சட்டங்களுடன் குறுக்கிட நமக்கு உரிமையில்லை.

நாம் ஏன் மறுமலர்ச்சி வேலைகளில் ஈடுபடுவதில்லை. இந்த மறுமலர்ச்சி வேலைகளில் ஈடுபடுகிறவர்கள் வேத வாக்கியங்கள் நமக்கு சொல்லாத காரியங்களை செய்வதே அதற்கு காரணமாக இருக்கிறது. ஒருவர் பேசுவதைக் கேட்கும்படி ஜனங்களை இழுத்துக்கொண்டு வரும்படி வேதம் எதுவும் கூறவில்லை. ஒவ்வொருவரும் தனக்கு எது சிறந்தது என்று தோன்றுகிறதோ அதை செய்வார்களாக. வித்தியாசமாக ஒருவர் சிந்திப்பாரானால் அவரால் நல்லது எதையாவது செய்ய முடிந்தால் சகலமும் நல்லது; அவர் நன்மை செய்வதைக் காட்டிலும் தீமை செய்வாரானால் அதற்கு அவர் பொறுப்பாகிறார். வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள மார்க்கத்தை பின்பற்றுவது தான் நமது பொறுப்பாக இருக்கிறது. மறுமலர்ச்சி கூட்டங்கள் நடத்துவது பற்றி வேதாகமம் எதுவும் கூறுவதில்லை. இதைச் செய்ய விரும்புகிறவர்கள் அதைச் செய்யும் சலுகையை பெற்றிருக்கிறார்கள். இது ஒரு சுதந்திர நாடு. ஆனால் இயேசு இதை செய்ததாக நாம் வேதத்தில் காண்பதில்லை. வித்தியாசமாக சிந்திப்பவர் தனது விருப்பத்தின்படி செய்ய முழு சுதந்திரம் பெற்றிருக்கிறார். யாரும் குறை கூறாதபடி அவர் செய்யட்டும்.

சத்திய ஊழியத்திற்காக ஏன் நீங்கள் நிதி திரட்டுவதில்லை என்ற கேள்வி கேட்கப்படுகிறது. உங்கள் ஊழியத்திற்காக நீங்கள் நிதி கொடுக்கும் உரிமை பெற்றிருக்கிறீர்கள் என்பதே எங்களது பதில். இது நம்முடையது அல்ல, உங்களுடையது. நீங்கள் செய்கிறவைகளுக்கு நீங்கள் ஆண்டவரிடம் பொறுப்பாகிறீர்கள். ஆகையால் நீங்கள் விரும்புவதை செய்ய உங்களுக்கு உரிமையும் சலுகையும் இருக்கிறது. இதே தான் எங்களுக்கும் இருக்கிறது. நாம் புறஜாதிகளுக்காக செய்ய முயற்சிக்கிற காரியம் அவர்களுக்கு தேவன் அன்பாயிருக்கிறார் என்பதைக் காண்பிக்கவே ஆகும்.

நித்திய ஆக்கினை என்ற கோட்பாடு தவறானது என்பதை அவர்களுக்கு காண்பிக்கவே நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். மேலும் அவர்கள் வேதாகமத்தின் போதனைகளை அவர்கள் அறிந்து கொண்டால், தேவன் அன்பின் தேவன் என்பதை அறிந்து அவர்கள் அவரை நேசிப்பார்கள். இது அவர்களுக்கு உதவிகரமாயிருக்கும். சத்திய ஊழியத்திற்கான ஒரு நிதியை ஏற்படுத்த உங்களுக்கு உரிமை உண்டு. நாங்கள் உங்கள் வழியில் துரும்பை போட விரும்பமாட்டோம். சீக்கிரத்தில் "நன்றாய் செய்தாய்!" என்று ஆண்டவர் உங்கள் வேலைக்கோ அல்லது எங்கள் வேலைக்கோ கூறுவதை நீங்கள் கேட்பீர்கள்

பொதுவுடமையில் நாம் ஏன் ஈடுபடுவதில்லை. பொதுவுடமை என்பது நடைமுறைப்படுத்த முடியாதது. பொதுவுடமை (சோசலிசம்) என்பது உலகிற்கு மாபெரும் காரியங்களை செய்துள்ளது. ஜனங்களுக்கு பொதுவுடமை இரயில், கார், சமையல் வாயு, தண்ணீர் முதலானவைகளை கொடுத்திருப்பதால் நாம் சந்தோஷம் அடைகிறோம். உதாரணத்திற்கு ஒரு குடும்பம் சொந்த சமையல் வாயுவையோ அல்லது தண்ணீர் சுத்தப்படுத்துவதையோ செய்தால் அது பெரும் செலவை ஏற்படுத்தும். ஒவ்வொரு குடும்பமும், தெரு, கார் முதலானவை பெற்றால் அனைத்து தெருக்களிலும் கும்பல் அதிகமாகிவிடும். ஆனால் சோசலிசம் என்பது உலகின் இரட்சகர் என்றால் நாங்கள் அதை மறுக்கிறோம். மாறாக, சோசலிசம் என்பது உலகில் அராஜகத்தை கொண்டு வர இருக்கிறது என்று நாங்கள் கூறுகிறோம். பொதுவுடைக்காரர்கள் இதைச் செய்ய விரும்பமாட்டார்கள், ஆனால் அவர்கள் விவேகமில்லாதிருக்கிறார்கள்.

அதன் அநேக அம்சங்கள் நன்மையானது என்று நாம் கூறினாலும், இதே பலன்களை நிறைவேற்றக்கூடிய மேலான வழியை வேதாகமத்தில் தேவன் வைத்திருப்பதை நாம் காண்கிறோம். எனினும் ஆசீர்வாதங்கள் வருவதற்கு முன்னால் மகா ஆபத்தின் காலம் வரும் என்று வேதாகமம் நமக்கு உறுதியளிக்கிறது. ஆனால் தேவன் முதலாவது பரிசுத்தவான்களின் கூட்டத்தை கூட்டிச் சேர்த்து, சோதித்து, மெய்ப்பித்துக் கொண்டிருக்கிறார். இதன்மூலம் அவர் எதிர்கால ராஜ்யத்தின் ஆளுகையை அவர்களிடம் ஒப்படைக்கக் கூடும். தேவனுடைய ராஜ்யத்தை அவர்கள் அமைப்பார்கள்.

வேதாகமம்தான் சரியானதென்றும், சத்தியம் என்றும் தேவனுடைய ராஜ்யத்தை தவிர வேறு எதுவும் விரும்பப்படுகிற பலனை தராது என்றும் முழுமையாக நாம் நம்பிக்கை வைத்திருக்கிறோம். நாங்கள் தேவனுக்கு உடன் வேலையாட்கள். அவர் நம்முடன் இணைந்து வேலை செய்கிறார். நாமும் அவருடன் இணைந்து வேலை செய்கிறோம். என்ன வேலை? தேவனுடைய தற்கால வேலை உண்மையான பரிசுத்தவான்களை தெரிந்து கொண்டு அவர்களை வழி நடத்தி ஏற்படுத்தப்பட்ட போகிற ஆவிக்குரிய ராஜ்யத்தில் இணைப்பதாகும். ஆகையால் நாம் சோசலிசத்திற்காக ஓரளவுக்கு வேலை செய்கிறோம். ஆனால் ஒரு வித்தியாசமான முறையில் பொதுவுடைமைக்காரர்கள் அவர்களது வெளிச்சத்தின்படி வேலை செய்கிறார்கள். நாம் நமது வெளிச்சத்தின்படி வேலை செய்கிறோம்.

### சில ஒளிரும் முரண்பாடுகள்

தேவன் மற்றும் அவரது சித்தத்தைக் குறித்து குறிப்பிட்ட உறுதியான எண்ணங்களையும், நல்ல நோக்கங்களையும், நல்ல விருப்பங்களையும் பல்வேறு சபைப் பிரிவைச் சார்ந்த கிறிஸ்தவர்கள் கொண்டிருக்கிறார்கள். இவர்களில் இருவர் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அவர்களது அநேக நம்பிக்கைகள் முரண்பட்டவைகளாக இருக்கின்றன. அறுநூறுக்கும் மேற்பட்ட சபை பிரிவுகள் இருக்கின்றன. முழுக்கு ஞானஸ்நானம் எடுக்காதவர் நித்திய ஆக்கினைக்கு போவார்கள் என்று பேப்டிஸ்ட் கூறுவது நம்மால் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல. நியாயமற்ற எதையும் நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம். இதே போல் தான் நமது பிரிஸ்பட்டேரியன் நண்பர்களையும் அவர்களது போதனைகளையும் ஏற்றுக்கொள்ளமாட்டோம். அவர்கள் நிச்சயமாக நேர்மையானவர்கள் தான். அவர்கள் ஜான் கேல்வின் அவர்களின் போதகத்தை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஜான் கேல்வின் சரியான கருத்துடையவராயிருந்தால் அவரது கிறிஸ்தவ சகோதரன் செர்வட்டஸை (Servetus) கழுமரத்தில் எரிக்க மரண ஆணைப் பத்திரத்தில் (death warrant) கையெழுத்திட்டிருக்க மாட்டார். இந்த உண்மை, அவர் எண்ணத்திலும், இருதயத்திலும் உண்மையுள்ள –வராயிருந்தாலும், அவர் சரியான முறையில் போதகர் அல்ல என்று நமக்கு போதிக்கிறது. இறையியலை நாம் பார்க்கும் போது தேவன் மனுக்குலத்தை, அவர்கள் நன்மை செய்ததற்காக அல்ல, காக்க வேண்டும் என்ற அவரது சித்தத்தின்படி தேவன் முன்னரே தீர்மானித்திருந்தார் என்று காண்கிறோம். அவரால் தெரிந்துகொள்ளப்படாதவர்கள் அனைவரையும் நித்திய ஆக்கினையில் போட முன்னரே தீர்மானித்திருந்தால், இப்படிப்பட்ட போதனையை நாம் நம்பினால், தேவன் ஒரு பெரிய அளவிலான பிசாசாக இருந்தார் என்று நாம் கற்பனை பண்ண வேண்டியிருக்கும். கோடிக்கணக்கான ஜனங்களை பிறப்பித்து விட்டு நித்திய ஆக்கினையை தவிர தம்மிடம் வேறு ஏதும் இல்லை என்று சொல்வாரானால், அது மாபெரும் பேய்க்கடுத்த கருத்தாக இருக்கிறது! இந்த கோட்பாட்டை நம்ப முடியாது. இதைச் செய்தோமானால், நம்மால் தேவனை ஆராதிக்க முடியாது!

மெத்தடிஸ்ட்டை பொருத்தவரை, அவர்களது இலவசமான கிருபை! இது பெரிதாக எதையும் காட்டவில்லை. பத்தாயிரத்தில் ஒருவருக்குத்தான் சந்தர்ப்பம் கிடைக்குமென்றால், அது எப்படி இலவசமான கிருபையாக இருக்க முடியும்? இந்த கருத்து அவர்களது சிந்தைக்கு அறிவுடையதாக காணப்பட்டால், அவர்களுக்காக நாங்கள் வருந்துகிறோம். ஒரு வருடத்திற்கு ஒரு பத்து லட்சம் டாலர் கொடுத்தால் கூட ஒரு மெத்தடிஸ்டாகவோ அல்லது ஒரு பிரிஸ்பட்டேரியனாகவோ இருக்க மாட்டோம்! அதற்கு நாங்கள் மெத்தடிஸ்டையும், பிரிஸ்பட்டேரியனையும் மற்றும் கத்தோலிக்க நண்பர்களையும் நேசிக்கவில்லை என்று பொருளல்ல, அப்படி நம்புவது எங்களுக்கு சரியாக இல்லை. அவர்களது ஒரு போதனையில் அவ்வளவு தவறுகளை நாம் காண்கிறோம்! அவைகளில் ஒன்றாகிலும் வேதத்திற்கு இசைவாக நாங்கள் காணவில்லை.

இயேசு, அப்போஸ்தலர்கள் மற்றும் அவர்களோடு இணக்கமாக இருக்கிறவர்களோடு நாங்கள் நிற்க விரும்புகிறோம். வேதாகமம் முதற்பேறானவர்களின் சபை என்று அழைக்கிறவர்களுக்காகவும் வேதாகமம் போதிக்கிறவைகளுக்காகவும் நாங்கள் நிற்க விரும்புகிறோம். இந்த நிலைப்பாட்டை நாங்கள் எடுக்கும் போது, வேதாகமமானது அழகானவைகளை போதிப்பதை காண்கிறோம். அதாவது தேவன், இயேசுவோடு அவருடைய ராஜ்யத்தில் இணைப்பதற்கு உண்மையிலேயே சபையை தயார்படுத்திக் கொண்டிருக்கிறார். யாரும் நித்திய காலமாக எரிக்கப்பட மாட்டார்கள் என்று காண்கிறோம். மாறாக, அனைவரும் என்றென்றும் ஜீவிக்க சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு ஆசீர்வதிக்கப்படுவார்கள்.

தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஆபிரகாமின் ஆவிக்குரிய சந்ததியாக இருந்து, தெரிந்துகொள்ளப்படாத அனைவரையும் ஆசீர்வதிப்பார்கள். வேதாகமத்தின்படி மரித்தவர்கள் அனைவரும் நித்திரையில் இருக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் அறியார்கள். "அவன் பிள்ளைகள் கனமடைந்தாலும் அவன் உணரான்." ஏனெனில், "நீ போகிற பாதாளத்திலே (ஷியோல்) செய்கையும் வித்தையும் அறிவும் ஞானமும் இல்லையே." இயேசு பாதாளத்திற்கு (ஷியோல்) சென்றார் என்று நாம் காண்கிறோம். இப்படியாக ஆதாமுக்கும் அவனது சந்ததியினருக்கும் மீட்கும் விலையை கொடுத்தபின், பிரேதக் குழிகளிலுள்ள அனைவரும் மனுஷ குமாரனுடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும் என்று காண்கிறோம்.

மேசியாவின் ஆளுகையின் ஆயிர வருட காலத்தில் கிறிஸ்துவும் அவரது சபையும் ஆளுகை செய்வார்கள், அவர்கள் மனுக்குலத்தை ஒடுக்க அல்ல, அவர்களை உயர்த்துவார்கள், பாவம் மற்றும் மரணத்தின் விலங்குகளை உடைப்பார்கள் என்று நாம் காண்கிறோம். இந்த ஆசீர்வாதமான ஏற்பாடுகளின் கீழ் அனைவரும் சத்திய அறிவிற்குள்ளாக கொண்டு வரப்படுவார்கள். ஆயிர வருட முடிவில் சபையானது தனது வேலையை முடித்திருக்கும். அவரது ஆளுகையின் பலனால், அநீதியையும் பாவத்தையும் நேசிக்கிறவர்களும் தேவனுக்கு இணக்கமாக வாழ மறுக்கிறவர்களும் அழிக்கப்படுவார்கள். ஆனால் தேவனுக்கு இணக்கமாக வாழ விரும்புகிறவர்கள் அனைவரின் முழங்கால் முடங்கும் என்று நாம் காண்கிறோம். "(கிறிஸ்துவுக்கு)

முன்பாக முழங்கால் யாவும் முடங்கும், நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்.''

### பிரதிபலனின் பிரமாணம்

இந்த காரணங்களால் தான் எதிர்மாறான கோட்பாடுகளையும் கருத்துக்களையும் உடையவர்களுடன் நாம் கை கோர்த்துக் கொண்டு வேலை செய்ய முடியாது. வேதாகமத்திற்கும் அவரது வசனத்திற்கும் மாறாகவும், அவருக்கு அவ மரியாதையாகவும் இருக்கிற விசுவாச அறிக்கைகளையும், முறைமைகளையும் உடையவர்களோடு நாம் இணைந்திருக்க முடியாது.!

இப்பொழுது சந்தர்ப்பத்தை பெறாத அநேகர் எதிர்காலத்தில் சந்தர்ப்பத்தை பெறுவார்கள். இப்பொழுது அவர்கள் அறிவு அவர்களுக்கு கெடுதல் எதையும் நடப்பிக்காது. ஒரு குறிப்பிட்ட மனதுடையவர்களால் தற்போது தேவனைப் பற்றிய காரியங்களை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்களால் நீதியான மற்றும் அன்பான தேவனை உணர்ந்துகொள்ள முடியாது என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. ஆகையால் ''துன்மார்க்கரில் ஒருவனும் உணரான்'' என்பது தான் வேத வாக்கியங்களின் அறிக்கை. அவர்கள் புரிந்து கொண்டால், நல்ல எண்ணத்தை பெற்றால், ஒவ்வொரு மீறுதலும் அதை தெரிந்து செய்கிற அளவுக்குத் தக்கதாக எதிர்காலத்தில் தண்டிக்கப்படுவார்கள் என்பதை காண்பார்கள். ஆகையால் அவர்கள் தங்களை கோபாக்கினைக்கு உட்படுத்திக் கொள்வதை அறிவார்கள்.

ஆகையால் தேவன், மனிதன் எதை விதைத்தானோ அதை அறுப்பான் என்கிற கோட்பாட்டை, பொது சட்டமாக ஏற்படுத்தியிருக்கிறார். மனிதன் இறங்குகிற ஒவ்வொரு படியிலிருந்தும் பின்வாங்க வேண்டும். இதை ஒவ்வொருவரும் அறிந்தால், அது மனுக்குலத்தை மிகவும் ஜாக்கிரதையாக இருக்கச் செய்யும். நீதியான தண்டனை உண்டு என்பதை ஒருவன் அறிந்தால், அது அநீதியான தண்டனை என்று நினைப்பதைக் காட்டிலும், இன்னும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கும்படிச் செய்யும். பாவத்திற்கான தண்டனையை பற்றிய கவனத்தை உடையவர்களாக ஜனங்கள் இருந்தால், நீதியாக வாழ்வதற்கான உரிமையைப் பற்றிய காரியத்தைக் குறித்து அவர்களை சமாதானப்படுத்துவது சக்தியுள்ள காரணியாக இருக்கும் என்பது எங்கள் கருத்து. நித்திய ஆக்கினையைக் குறித்த அவர்களது போதனைகள் எல்லாம், மிகவும் சொற்பமான பேர்களை மட்டுமே பரிசுத்தமான வாழ்க்கைக்கு, இயேசு அடிச்சுவட்டில் நடக்கிறவர்களாக, தேவனுடைய பிரியமான குமாரனின் குணலட்சணம் உடையவர்களாக மாற்றும் என்றும் சபை பிரிவினருக்கு நாம் மேற்கோள் காட்டலாம்.

**R5303**

## GOD'S WORK IN OUR WILLS AND HEARTS

# நம்முடைய விருப்பத்திலும் இருதயத்திலும் தேவனுடைய வேலை

''அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார். ''– (பிலிப்பியர் 2:12,13)

அப்போஸ்தலர் நாம் என்ற வார்த்தையை பயன்படுத்தும்போதெல்லாம் அது புது சிருஷ்டியை, கிறிஸ்துவுக்குள்ளான ஆவிக்குரிய புது சிருஷ்டியை குறிப்பிடுவது தெளிவாக இருக்கிறது. ''உங்கள் இரட்சிப்பு நிறைவேற பிரயாசப்படுங்கள்'' என்று அப்போஸ்தலர் கூறும் போது, அவர் அதை உலகத்தை நோக்கியல்ல, சபையை நோக்கி கூறுகிறார். புது சிருஷ்டியை நோக்கி கூறும் போது, தனித்தன்மை இன்னும் பராமரிக்கப்படுகிறது என்பதை நாம் நினைவுகூர வேண்டும். உதாரணத்திற்கு, நீங்கள் புது சிருஷ்டியாவதற்கு முன்பே, ''நீங்கள் கிரயத்துக்கு கொள்ளப்பட்டீர்கள்'' என்று அப்போஸ்தலர் கூறுகிறார். இது தான் முன்னிருந்ததைப்போல, அதே, நான் என்னும் அகங்காரம், அதே தனித்தன்மை ஆகும்.

''தேவனே உங்களில் உண்டாக்கிறவராயிருக்கிறார்'' என்ற வார்த்தைகளில், அப்போஸ்தலர், நீங்கள் வாங்கப்பட்ட போது தேவன் உங்களில் கிரியையை ஆரம்பிக்கிறார் என்று கூறவில்லை. ஆனால் அவர் உங்களது ஜெனிப்பித்தல் மற்றும் உயிரூட்டப்படுதலுக்கு முன்பே அவர் இப்படியாக செய்திருக்கிறார். வேத வாக்கியங்களில் சொல்லப்பட்டது போல, நமது அர்ப்பணத்திற்கு முன்பே நாம் தேவனால் இழுக்கப்பட்டிருக்கிறோம், தேவனால் அழைக்கப் –பட்டிருக்கிறோம்.

### நீதியை நேசிக்கிறவர்களுக்கு தேவன் காந்தமாக இருக்கிறார்

நீதியை நேசிக்கிற அனைவரையும் இழுக்கிற மாபெரும் காந்தமாக தேவன் குறிப்பிடப்படுகிறார். நாம் கிறிஸ்தவர்களாக ஆகிறதற்கு முன்னரே, அவர் நம்மை இழுத்தார். நமது பரம பிதாவின் நீதியும் சத்தியமுமே காந்தமாக இருக்கிறது. மனிதன் ஆதியிலே தேவ சாயலிலும் தேவரூபத்தின்படியும் சிருஷ்டிக்கப்பட்டு இப்போது இந்த சாயலும் ரூபமும் கொஞ்சம் மீந்திருக்கிறது. சுபாவ மனிதன் நீதியையும், சத்தியத்தையும் இரக்கத்தையும் நேசிக்கிற அளவுக்கு நீதி, நியாயம், சத்தியம் மற்றும் இரக்கத்திற்கு மகா மையமாக இருக்கிற தேவனால் அவன் அங்கீகரிக்கப்படுகிறான்.

மனுக்குலத்தில் சிலர் மிகவும் தாழ்ந்த நிலையில் விழுந்திருக்கிறார்கள். ஆகையால் காந்தத்தின் இழுக்கும் சக்தி அவர்கள் மேல் குறைவாக இருக்கிறது. விழுந்து போன மற்றவர்களிடம் கர்த்தரின் குணலட்சண சாயல் அதிகமாக மீந்திருக்கிறது. நீதியின் மேல் கொஞ்சம் அன்பையும் கொஞ்சம் இரக்க குணத்தையும் உடைய இப்படிப்பட்டவர்கள் மாபெரும் பரலோக பிதாவிடம் இழுக்கப்படுவதை உணருவார்கள். கிறிஸ்துவின் சீஷர்களாயிருக்கும் நாம் ஒவ்வொருவரும் பிதாவிடம் வருவதற்கு முன்னரே இழுக்கப்படுவதை உணர்ந்தோம். கர்த்தராகிய இயேசு கூறுகிறதாவது: ''என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக் கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்.'' ஆகையால் நாம் பிதாவானவரால் முதலில் இழுக்கப்பட வேண்டும்.

ஆனால் தேவன் அவரிடத்தில் வருவதற்கு நமக்கு ஒரே வழியையே ஏற்படுத்தியிருக்கிறார். இந்த வழி கிறிஸ்துவே, தேவனிடத்தில் வர விரும்புகிறவர்கள், இந்த வழியாக வந்து, வருவதற்கான நிபந்தனைகளை கற்றுக்கொள்ள வேண்டும். தங்களை தாழ்த்தி, சுய பலியினால் மட்டுமே அவர்கள் வர முடியும் என்று சொல்லப்பட்டிருக்கிறார்கள்.

“ஒருவன் எனக்கு சீஷனாயிருக்க விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றி வரக்கடவன்.” ஆகையால் உண்மையான, ஆர்வமான விருப்பம் இல்லாமல் யாரும் வரமுடியாது என்கிற ஒரு தடையை கர்த்தர் அங்கே வைக்கிறார். அடுத்த யுகத்தில் மீதமுள்ள மனுக்குலத்திற்கு ஏதோ ஒன்றை தேவன் வைத்திருக்கிறார். அவர் அவர்களோடு கூட வித்தியாசமான முறையில் தொடர்பு கொள்ளுவார். அவரைப் பற்றி வெறும் உணர்வு உள்ளவர்களை அவர் இப்போது பார்க்கவில்லை.

கர்த்தர் தேடுகிறவர்களைப் பற்றி கேள்வி எழுகிறது. நீதியையும் தேவனையும் நேசிக்கிறாயா? உன்னுடைய மானிட சித்தத்தையும் விருப்பத்தையும் அர்ப்பணித்து, அதற்கு பதிலாக தெய்வீக சித்தத்தை ஏற்றுக் கொள்கிறாயா? இந்த நிபந்தனைகளை அவர்கள் ஏற்றுக்கொண்டால், அவர்கள் இயேசுவின் சீஷர்களாவார்கள். அப்படி என்னால் போக முடியாது என்று சொல்வார்களானால், அவர்கள் அவரது சீஷர்களாக ஆக முடியாது. ஒரு ஊழியக்காரர் கூறியதாவது: “என்னுடைய அர்ப்பணத்தை நான் தீவிரமாக இதுவரை எடுத்துக்கொள்ளவில்லை.” அநேக நல்ல சகோதரர்களிடமும் இப்படியே இருக்கிறது. அவர்கள் பரலோகத்திற்கு, மலர் மெத்தைக்கு எளிதாக போக நினைக்கிறார்கள்.

ஆனால் தங்கள் ஜீவனை முழு அர்ப்பணம் செய்து, கிறிஸ்து மூலம் பிதாவானவரிடம் உயர்வான உறவுக்குள் வருகிறவர்களே புது சிருஷ்டிகள். இந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு தேவன் அவர்களிடம் வேலை செய்வதை நிறுத்திவிடுவாரா? இல்லை. அவர்களில் வேலை செய்ய இன்னும் வழிகளை கொடுத்திருக்கிறார். அது தேவனைப் போன்ற குணலட்சண ஆவி, அவர்களது நீதியின் மேலுள்ள அன்பு, பூமிக்குரிய உரிமைகளை விட்டு கொடுக்கும்படியான விருப்பத்தை அவர்களில் ஏற்படுத்தும்படி அவர்களில் இப்படி வேலை செய்தது. அது ஒரு வல்லமையான வேலை. தேவன் முதலில் நம்மில், நமது சித்தத்தில் வேலை செய்கிறார். நாம் செய்தது எல்லாம் கிறிஸ்து மூலமாக நம்மை அவரிடம் கொடுத்துதான் அவர் நம்மை ஏற்றுக்கொண்டால், நம்மை தேவனிடம் ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று நாம் விரும்பினோம். அவர் நம்மை ஏற்றுக்கொண்டார்.

## தேவனுடைய சித்தத்தை அறிவதற்கான மூன்று வழிகள்

நமது விருப்பமும் கிரியைகளும் தேவனை பிரியப்படுத்தும்படியாக இருக்க தேவனுடைய சித்தத்தை அறியும்படியாக, அவரது வசனம், அவரது பராமரிப்பு மற்றும் நமது வாழ்க்கையின் அனுபவங்கள் மூலமாக நாம் அறிவுறுத்தல்களை பெறுகிறோம். நாம் அர்ப்பணம் செய்த பொழுது, அவருடைய சித்தத்தின்படி செய்ய விரும்பினோம். ஆனால் அதை முழுமையாக காண முடியவில்லை. போகப்போக நாம் அவரது சித்தத்தை தெளிவாக காண்கிறோம். நமது அனைத்து அனுபவங்களிலும் அவரது பராமரிப்பின் வழி நடத்துதல்களை நாம் காண்பதால், நாம் அதிகமதிகமாக அவரது ஆவியால், பரிசுத்த ஆவியால் ஊக்கம் அளிக்கும்படி வருகிறோம். இப்படியாக நாம் செயல்பட தேவன் நம்மில் படிப்படியாக கிரியை நடப்பிக்கிறார். முதலாவது விருப்பம் வருகிறது. பின்பு உயிரூட்டப்படுதலும், ஆற்றலும் செய்கையும் வருகிறது.

நம்மில் விருப்பத்தை ஏற்படுத்துகிற அதே வல்லமையே, கிரியையும் நம்மில் நடப்பிக்கிறது. பூரணமாக நாம் விரும்ப முடியுமா? முடியும். நாம் பூரணமாக கிரியை நடப்பிக்க முடியுமா? முடியாது. நம்மால் பூரணமாக விருப்பங்கொள்ள முடியும். ஆனால் பூரணமாக கிரியை நடப்பிக்க முடியாது. ஏன்? ஏனெனில் தேவனுடைய சித்தம் நம்முடைய சித்தமாக, நம்முடைய சிந்தையாக ஆகியிருக்கிறது. அப்போஸ்தலர் கூறுகிறதாவது: “நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கும், மாம்சத்தினாலேயோ பாவ பிரமாணத்திற்கு ஊழியம் செய்கிறேன்.” (ரோமர் 7:25) மாம்சமானது பல்வேறு பலவீனங்களையும் விழுந்து போன சுபாவங்களையும் சுதந்தரித்துக் கொண்டிருக்கிறது; ஆகையால் பூரணமான வேலைகளை செய்ய முடியாதவர்களாக இருக்கிறோம். மேலும் மாம்சத்திற்கு தொடர்ந்து கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரம் தேவைப்படுகிறது.

மகா இரட்சகர் நமது மாபெரும் பரிகாரியாக இருப்பதும், பரலோக கிருபாசனத்தண்டையில் தைரியமாக வந்து, ஏற்ற சமயத்தின் சகாயம் செய்யும் கிருபையை அடைவதும் நமக்கு தொடர்ந்து தேவைப்படுகிறது. முதலில் விருப்பத்தை பெறவும் பிறகு தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி செய்யவும் அவர் புது சிருஷ்டிகளில் கிரியை நடப்பித்துக் கொண்டிருக்கிறார். நாம் தேவனுடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அவருடைய தயவுள்ள சித்தத்தின்படி நாம் களிகூர வேண்டும். எப்படியாவது அவரது சித்தத்தை செய்வதில் நாம் சந்தோஷப்பட வேண்டும் என்பதற்காக அவருடைய ஒவ்வொரு வாக்குத்தத்தமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படியாக நமது சொந்த இரட்சிப்பிற்காக பிரயாசப்பட்டு நமது பரலோக கர்த்தரை பிரியப்படுத்துவோமாக.

## நமது இரட்சிப்பிற்காக பிரயாசப்படுதல்

சில ஜனங்கள் நினைப்பது போல நமது தலைப்பு வசனம் உலகத்தை நோக்கி கூறப்படவில்லை என்பதை நினைவிற்கொண்டு அதை அதன் அமைப்பில் ஆராய்ந்தால்தான் அதை நாம் உணர்ந்து கொள்ள முடியும். அது ஒரு விசேஷித்த வகுப்பாரைக் குறித்து சொல்லப்படுகிறது. அவர்களது பாவங்கள் மன்னிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகள் என்கிற நிலைக்கு ஒரு விசேஷித்த உறவுக்குள் கிறிஸ்து மூலமாக கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைப்பாட்டில் இருந்து கொண்டு தான் அவர்களது இரட்சிப்புக்காக பிரயாசப்பட வேண்டும். நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தலினால் நமது இரட்சிப்பு கொண்டுவரப்படவேண்டும்.

இப்பொழுது இரட்சிப்பை யாரும் பெறவில்லை, பெற்றதாக கருதப்படுதல் மட்டுமே இருக்கிறது. இந்த பொருளில் நாம் இரட்சிக்கப்பட்டு பிதாவின் அருகே நெருங்க முடியும். ஆனால் நாம் இன்னும் பாவம் மற்றும் மரணம் என்ற பொதுவான ஆளுகையின் கீழ் இருக்கிறோம். உண்மையிலேயே நாம் இன்னும் இரட்சிக்கப்பட வில்லை. நமது இரட்சிப்புக்காக நாம் பிரயாசப்பட வேண்டும். தலைப்பு வசனத்தில் அது எப்படி செய்யப்பட வேண்டும் என்று காண்பிக்கிறார். அவர் சபையை நோக்கி, பிரியமானவர்களே என்று கூறும்

பொழுது இன்னும் காண்பிக்கிறார். அவர் மோசமானவர் –களிடமோ, கிறிஸ்துவைப் பற்றி அறியாதவர்களிடமோ அல்லது புறஜாதி அல்லது இழிவானவர்களிடமோ சொல்லவில்லை. அந்த நிரூபமே தேவனுடைய பரிசுத்தவான்களுக்கே கூறுவதாக காண்பிக்கிறது.

என்ன வகையான இரட்சிப்புக்காக நாம் பிரயாசப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்? அது நிலைமைகள் சாதகமாக இருக்கும் பொழுது, சாத்தான் ஆயிரம் வருடம் கட்டப்பட்டிருக்கும் போது, சகல செல்வாக்கும் மேசியாவின் இராஜ்யத்தில் செயல்பாட்டில் இருக்கும் பொழுது, பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுபட்டு மனித பூரணத்திற்கு வருகிற பொதுவான இரட்சிப்பு இல்லை. "உங்கள் இரட்சிப்பு" என்று அப்போஸ்தலர் கூறும் போது, இந்த சுவிசேஷ யுகத்திற்குரிய விசித்திரமான இரட்சிப்பு என்று குறிப்பிட்டு கூறுகிறார். இன்னும் "இவ்வளவு பெரிய இரட்சிப்பு" என்றும் கூறுகிறார். (எபிரேயர் 2:3)

எந்த அளவுக்கு இது மகா பெரிய இரட்சிப்பு என்று பார்க்க இந்த விஷயத்துக்குள் நுழையும் பொழுது, அதன் ஆழத்தையும் உயரத்தையும் பார்த்து நாம் அதிகமதிகமாக ஆச்சரியப்படுகிறோம். இது மரணத்திலிருந்து இரட்சிக்கிற வெறும் இரட்சிப்பு அல்ல. இதை விட மிகவும் அதிகமானது. இது நித்தியமாக இருக்கப்போவது மட்டுமல்ல, கனம், மகிமை மற்றும் சாகாமைக்கும், தூதர்களுக்கும், துரைத்தனம் மற்றும் அதிகாரத்திற்கும், பேர் பெற்றிருக்கும் சகல நாமத்துக்கும் மேலாக உயர்த்தப்பட்ட மேசியாவின் சகல மகிமைக்கும் அவருக்கு உடன் சுதந்தரராகும் ஒரு இரட்சிப்பு ஆகும். (எபேசியர் 1:21) பெரிதாக காணப்படுகிற இந்த மாபெரும் இரட்சிப்பின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தை காணும்படியாக நமது புரிந்து கொள்ளும் கண்கள் விரிவாக திறந்திருக்கிறது. அதை அடையும்படியான சத்தியத்தை நாம் நினைப்பதால், நாம் ஆச்சரியத்தாலும் பயத்தினாலும் கூட நிரப்பப்படுகிறோம். இவ்வளவு பெரிய அழைப்புக்கு, இவ்வளவு மகிமையான ஒரு இரட்சிப்புக்கு நம்மில் யாரும் எதற்காக குறைவு பட வேண்டும்!

அப்போஸ்தலர் கூறுகிறதாவது: "ஆனபடியினாலேயே அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்கு உண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாக காணப்படாதபடிக்கு பயந்திருக்கக்கடவோம்." (எபிரேயர் 4:1) மகிமையான தெய்வீக திட்ட நிலைக்கு நாம் குறைவுபடுகிறோம் என்ற சிறிய தகவல், நாம் மாபெரும் இரட்சிப்பை இழந்து விடுவோம் என்கிற பயம் நம்மை நிரப்ப வேண்டும். புறஜாதியாரைப் போல, தேவனைப் பற்றிய தவறான புரிந்து கொள்ளுதலினாலும், அறியாமையினாலும் உண்டான நித்திய ஆக்கினையைப் பற்றிய பயம் அல்ல இது. அவர்களுக்கு தேவனைப் பற்றிய பயம், திகில் இருக்கிறது. அது நித்திய ஆக்கினையில் கொண்டு போய் முடிகிறது. அப்போஸ்தலர் யோவான் கூறுகிறதாவது: "பயமானது வேதனையுள்ளது." நாம் தேவனைப் பற்றிய அறிவுக்கும் அவரை பிதா என்று அழைக்கும் சலுகைக்கும் வந்திருப்பதால் இப்படிப்பட்ட பயம் நம்மை விட்டு நீங்கி விட்டது. மொத்தத்தில் நம்மை தூண்டுவது பரிசுத்தமான பயம். மனிதரைப் பற்றியோ வேறு எதைப் பற்றியோ அடிமைத்தன பயம் நமக்கு இல்லை. ஒரு விசேஷித்த இரட்சிப்புக்கு அழைக்கப்பட்ட, பிரியமான இந்த விசேஷித்த வகுப்பாருக்கு உரியவர்களாயிருக்கிறோம்.

## நமது மாபெரும் சொந்த பொறுப்பு

பிரயாசப்படுங்கள் என்ற சொற்றொடர் ஒரு விநோதமான வலிமையும் அர்த்தமும் உடையதாக இருக்கிறது. அது கஷ்டமானது என்றும் அதற்கு காலமும் பொறுமையும் தேவைப்படுகிறது என்றும் தெரிவிக்கிறது. தீர்மானம் முன்னரே எடுக்கப்பட்டிருக்கிறது. இல்லையென்றால் இந்த வகுப்பினராக இருந்திருக்க முடியாது. நாம் இந்த தீர்மானத்தை எடுத்த போதே இந்த காரியத்தை முடித்துவிட்டோம். நாம் நமது சரீரங்களை முன்னரே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்துவிட்டோம். நாம் இப்பொழுது தேவனுடைய பிரியமான பிள்ளைகளாக இருக்கிறோம். நாம் பொய்களை மேற்கொண்டிருக்கிறோம். நமது ஆண்டவர் எப்படி பூமிக்குரிய ஜீவனை பலி கொடுத்தார் என்பதை நாம் காண்கிறோம். அவர் நமக்கு திருஷ்டாந்தமாக இருக்க வேண்டும் என்பதை வேத வாக்கியங்களிலிருந்து நாம் காண்கிறோம். தேவனுடைய சித்தம் அனைத்திற்கும் நாம் நம்மை சந்தோஷத்துடன் ஒப்புக்கொடுக்க வேண்டும். தேவனுடைய சித்தம் நம்மில் நிறைவேற, அது எப்படிப்பட்ட விலைக்கிரயமாக இருந்தாலும், அது பலியாக இருந்தாலும் நாம் சந்தோஷப்பட வேண்டும்.

கடினமான கவனிப்பினால் நமது மாபெரும் இரட்சிப்புக்காக நாம் பிரயாசப்படுகிறோம். தேவன் வழியை கொடுத்திருக்கிறார். நமக்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருக்கிறார். தேவனைப் பொறுத்தவரை எந்தவித குறைவும் இல்லை. முழு காரியமும் நம்மேல் விழுந்திருக்கிறது. தேவன் நம்மை பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பித்திருக்கிறார். நமக்கு தேவையான சகல செல்வாக்குகளும் நமது கையில் இருக்கிறது. ஏனெனில் அவரது கட்டளையால் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். ஏனெனில் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, நமது மாபெரும் பரிகாரியின் புண்ணியத்தின் மூலமாக அவரது குடும்பத்திற்குள் நாம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறோம்! இவை எல்லாவற்றையும் நாம் நினைப்பதால் நடுக்கம், பயம் போன்ற உணர்வுகளுக்கு அதிகமாக செல்லுகிறோம்! கனம், மகிமை மற்றும் சாகாமை என்கிற இந்த மாபெரும் நிலை அங்கே இருக்கிறது. பலன் நமது கைகளில் இருக்கிறது! எனது வெற்றிக்கோ அல்லது தோல்விக்கோ என்னைத் தவிர வேறு யாரும் இந்த பிரபஞ்சத்தில் பொறுப்பு இல்லை! அந்த மாபெரும் பரிசை நான் அடைய வேண்டும்! எனக்காக கர்த்தர் அதை பெறமாட்டார். இந்த மாபெரும் உடன்படிக்கையை நிறைவேற்ற அவர் உதவி மட்டுமே செய்வார்.

ஆகையால் நாம் இந்த பயத்தை பெற்றிருப்பது மிகவும் சரியானது. நித்தியத்திற்கும் நாம் சரித்திரம் படைக்கிறோம் என்பதை உணருகிறோம். நாம் மகிமையின் மாபெரும் தளத்தில் தெய்வீக சுபாவத்தில் இருக்க வேண்டும் அல்லது

அதற்கு தாழ்வான தளத்தில் லேவியர்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நாம் எல்லாவற்றையும் இழந்து, மீட்பே இல்லாத இரண்டாம் மரணத்துக்கு போவோம்.

### நமது இருதயத்தில் கிரியை செய்யப்படுகிறது

இந்த உண்மைகளை உணர்வதால், நாம் நடுங்கி பயப்படுவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. நாம் நடக்க வேண்டிய அவசியத்தை உணருகிறோம். அப்போஸ்தலர் கூறுவது போல, கிறிஸ்துவுக்குள் தேவனுடைய சித்தத்துக்கு இசைவாக நமது சிந்தனைகளை கவனமாய் பார்த்து நடக்க வேண்டும். உண்மையிலேயே இது நடுக்கம் மற்றும் பயம் என்று சொல்லப்படுகிற நிலைமையாகும். அது மாபெரும் ஆர்வத்தின் நிலைமையாகும். இங்கே முட்டாள் தனத்திற்கோ, லேசான தன்மைக்கோ அல்லது அற்பத்தனத்திற்கோ இடமில்லை. நாம் நமது அர்ப்பணத்தின் உறுதி மொழியில் நாம் என்ன சொல்லியிருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறோமா என்பதை காணவும், நாம் உண்மையுள்ளவர்களாக இருந்தோமா என்பதை அறியும்படிக்கும், நாம் எந்த அளவுக்கு நம்மைக் குறித்து மிகைப்படுத்தி கூறினோமா என்பதையும், அவரிடம் முழு அர்ப்பணத்தை குறிக்கவில்லை என்பதையும் காணும்படி நாம் பெற்றிருக்கிற ஒவ்வொரு சக்தியையும் தேவன் சோதித்துக் கொண்டிருக்கிறார்.

நாம் இந்த காரியத்தில் முழுவதுமாக ஆர்வம் இல்லாதிருந்தால் அதை நாம் காண்பிப்போம். நம்மை ஏற்றுக்கொள்வதற்கான சகல நிலைமைகளையும் ஏற்படுத்துவதற்கு அவரது பங்கை செய்திருக்கிறார். இப்பொழுது பிரயாசப்படுவதற்கான எல்லாம் நமக்கானது. இதை நாம் நினைவுகூருவதால் நிச்சயமாக நாம் நடுக்கத்தையும் பயத்தையும் பெற்றிருக்கிறோம். தேவன் நம்மில் கிரியை நடப்பிக்கிறார் என்பதை நாம் அறிவோம். தேவனே நம்மில் ஒரு வேலையை ஆரம்பித்திருக்கிறார். எந்த ஒரு தேவதூதனும் தங்கள் இருதயங்களில் கிரியை நடப்பித்தலை பெறவில்லை. இந்த இரட்சிப்புக்கான அழைப்பை எந்த ஒரு தேவதூதனும் பெறவில்லை.

நம்மை புது சிருஷ்டிகளாக ஆக்கும்படி பிதாவானவர் நம்மை குறித்த வகையில் ஆதாமின் குடும்பத்தினராக இருந்த நம்மை மறுரூபமாக்கி அபிவிருத்தி செய்து வருகிறார். அவரது சித்தத்தின்படி அவரது கிருபையின் மூலம் அவரே நம்மில் கிரியை நடப்பித்தார். பிறகு, நம்மை ஜீவ பலியாக சமர்ப்பித்த பிறகு, அதை செய்யும்படி நம்மில் கிரியை நடப்பிக்கிறார். நம்மால் மாம்சத்தின்படி பூரணமாக செய்ய முடியும் என்றல்ல. தேவன் நம்மால் முடியாது என்பதை அறிவார். அவர் நம் மாம்சத்தில் பூரணத்தை எதிர்பார்க்கவில்லை. ஆனால் அவர் நமது இருதயத்தில் பூரண நோக்கத்தை எதிர்பார்க்கிறார். அவர் கூறுகிறதாவது: "எனது பிள்ளை போரிடுவதற்கு தனது மாம்சத்தில் அபூரணத்தை பெற்றிருந்தான். அவன் இவைகளுடனான நல்ல போராட்டத்தால் எனது சித்தத்திற்கு கீழ்ப்படிதலை காண்பித்திருக்கிறான். காலப்போக்கில் இந்த பிள்ளைக்கு உயிர்த்தெழுதலில் ஒரு பூரண சரீரத்தை, ஆவிக்குரிய சரீரத்தை நான் கொடுத்தால் பிறகு என் சித்தத்தை செய்வான் என்று நான் நிச்சயிக்கிறேன். விரும்புவதற்கு எனது ஆவி அவனிடத்தில் கிரியை செய்திருக்கிறது. அதை செய்வதற்கு அது அவனில் இப்பொழுது கிரியை நடத்திக் கொண்டிருக்கிறது. அவன் தற்கால நிலைமையின் கீழ், ஒரு பரிபூரண சரீரத்துடன் அவன் என்ன செய்வானோ அதை தன்னால் முடிந்தவரை செய்து கொண்டிருப்பதை எனக்கு காண்பித்துக் கொண்டிருக்கிறான். பலவீனமுள்ளதாய் இந்த புது சிருஷ்டி விதைக்கப்பட்டு பலமுள்ளதாய் எழுப்பப்படும். ஜென்ம சரீரம் விதைக்கப்படும். ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்." (1கொரிந்தியர் 15:42-44)

**R5304**

## GOD'S SUPERVISION IN THE WORLD AND IN THE CHURCH
## சபையிலும், உலகத்திலும் தேவனுடைய மேற்பார்வை

''கிழக்கிலும், மேற்கிலும் வனாந்தர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயதிபதி, ஒருவனைத் தாழ்த்தி ஒருவனை உயர்த்துகிறார்.'' - சங்கீதம் 75:6,7

வேதவாக்கியம் அறிவிக்கிறதாவது: "பூமியையோ அவர் (தேவன்) மனுபுத்திரருக்குக் கொடுத்தார்." தகப்பனாகிய ஆதாம் பூமியின் முதல் மகாராஜாவாக இருந்தார். அவரது விழுகைக்குப் பிறகு பூமியிலுள்ள மிருகங்கள், சமுத்திரத்தின் மச்சங்கள், ஆகாயத்திலுள்ள சகல பறவைகளில் மேலுள்ள இந்த இராஜ்யம் பூரண மனிதனின் கையிலிருந்து பிடுங்கப்பட்டது. ஏனெனில் மனிதன் அதை சீரழிக்க ஆரம்பித்திருந்தான். மனிதனின் கீழ்ப்படியாமையினால் இந்த ராஜ்யம் பரலோக பிதாவின் ஆவியினால் வழிநடத்தப்படுவதிலிருந்தும் கைவிடப்பட்டது. ஆதியிலே பூமியின் விவகாரங்களில் மனுக்குலத்திற்கு தேவனுடைய வழி நடத்துதல் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் மனுக்குலமானது பித்துபிடித்தது போனது அல்லது சம நிலையற்று போனது. பாவமும் மரணமும் ஏற்படுத்தின சீரழிவின் நிலை இது தான்.

சாத்தான், இருளை வெளிச்சம் என்றும், வெளிச்சத்தை இருளென்றும் காண்பித்து, பல்வேறு காரியங்களில் மனுக்குலத்தை குருடாக்கி, வஞ்சித்து, தவறாக வழிநடத்தி வருகிறான். சாத்தானின் இந்த சக்தியை வேத வாக்கியங்கள் "இப்பிரபஞ்சத்தின் தேவன்" என்று கூறுகின்றன. அவன் எப்படி ஆளுகை செய்கிறான் என்று நாம் அறிவுறுத்தப்படுகிறோம். அவன் பாவத்தை ஊக்குவித்து, தேவனுக்கு விரோதமானவைகளை ஊக்குவித்து வருகிறான். அவன் "கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியை செய்து

வருகிறான்.'' இந்த வேலை நூற்றாண்டு காலமாக, குறிப்பாக ஜலப்பிரளயத்திலிருந்து நடந்து வருகிறது. அதற்கு முன்னான காலங்களில் சாத்தான் வித்தியாசமான முறைகளில் கிரியை நடப்பித்து வந்தான். ஏனெனில் ஜனங்கள் அப்போது சரியான திட்ட அளவில் பழக்கப்பட்டிருந்தார்கள். இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் குறைவாகவே விழுந்து போயிருந்தார்கள். ஆயுசு நாட்கள் ஜலப்பிரளயத்திற்கு முன்பு அதிகமாக இருந்தது. தற்காலத்தில் மனிதனின் ஆயுசு நாட்கள் முப்பத்தி ஐந்து வருடமாக இருக்கிறது. (இது 1913ல் எழுதப்பட்டது)

தேவன் மனிதர்களிடம் கொடுத்த காரியங்களில் தேவன் தலையிடுவதேயில்லை. மனுக்குலம் பின் நோக்கி பார்ப்பதால் செய்யப்பட்ட அபத்தங்களை பார்க்கிறார்கள். "இப்பிரபஞ்சத்தின் தேவனுடைய" சக்தியின் கீழ் இருந்து கொண்டு, சாத்தான் அவர்களை தவறாக வழி நடத்த அனுமதிக்கப்பட்டு, அவர்கள் பல்வேறு கண்ணிகளுக்குள் விழுந்து இருக்கிறார்கள். எவ்வளவு முடியும் என்று நினைப்பதைக் காட்டிலும் அதிகமான அளவில் மனுக்குலமானது பாவம் மற்றும் மரணத்தின் மிகவும் தீவிரமான அனுபவங்களை பெற்றிருந்தார்கள். மனிதன் இந்த சீரழிவான நிலையில் எப்பொழுதுமே இருந்ததில்லை என்ற உண்மைக்கு அப்போஸ்தலர் நமது கவனத்தை ஈர்க்கிறார். மனிதன் பாவம் செய்த பொழுது அவன் தன் சொந்த விருப்பத்தின்படி செய்ய தேவன் அவனை அனுமதித்தார். அவன் பாவத்தில் விழுந்துபோகவும், சத்துருவானவன் அவனை தவறாக வழி நடத்தவும் அனுமதித்தார் என்று அப்போஸ்தலர் கூறுகிறார்.

தேவன் ஏன் இதை செய்ய வேண்டும்? மனுக்குலம் அடுத்த யுகத்தில் பாவத்தின் இயல்பான தன்மை என்ன என்பதையும் அதன் பலனையும் காண்பார்கள் என்பதும், ஒரு மாபெரும் நிரந்தரமான பாடத்தை கற்றுக் கொள்ளுவார்கள் என்பதும், தெய்வீக நிலைப்பாட்டிலிருந்து விலகுதல், தீமையை விளைவிக்கும் என்பதை மனுக்குலம் அறிந்துகொள்ளும் என்பதே தேவனுடைய நோக்கம். மேலும் இந்த பாடங்கள் தேவதூதர்களால் அங்கீகரிக்கப்பட்டு, பாவத்தின் பலன் என்ன என்பதை காண்பார்கள் என்பதும், இந்த மாபெரும் பயங்கரமான இலக்கான பாடம் அவர்கள் முன்னே இருக்கும் என்பதும் தேவனுடைய நோக்கமாகும். இந்த பாவ மார்க்கத்தில் மனுக்குலம் என்ன செய்திருக்கிறது என்பதை பயமும் திகிலும் இல்லாமல் சரித்திர ஏடுகளை யாரும் படிக்க இயலாது.

பிறகு நாம், எப்படி மனுக்குலமானது தேவனுடைய வழியை பின்பற்றுவதற்கு தேடுதலின் மூலம் அவர்களே உதவிக் கொண்டார்கள் என்பதை காண்கிறோம். தேவன் மனிதனுக்கு கெட்ட மனதை அனுமதித்து, அவன் தீய மார்க்கத்தை எடுத்த போது தடுக்காமல் இருந்ததால், மிகுந்த பயங்கரம், பலனாக இருந்ததை நாம் காண்கிறோம். (ரோமர் 1:28-32) ஜலப்பிரளயத்துக்கு முன்பு இருந்த நிலைமையை அனுமதித்திருந்தால் நிலைமை மிகவும் பயங்கரமாக இருந்திருக்கும் என்பதால் தேவன் குறுக்கிட்டார் என்று நாம் பார்க்கிறோம். மனிதனுடைய எண்ணங்கள் தீமையானதாக இருந்தன. தொடர்ந்து தீயவைகளாகவே இருந்தன. ஆகையால் இந்த நிலைமையை ஜலப்பிரளயம் மூலம் தேவன் முடிவுக்கு கொண்டு வந்தார். பேழை மூலம் காக்கப்பட்ட நோவா மற்றும் அவரது குடும்பத்தின் மூலம் ஒரு புது ஆரம்பத்தை தேவன் ஏற்படுத்தினார். நினிவே பட்டணத்தார், சோதோமியர் மற்றும் அமலேக்கியர்களின் விஷயத்தில் குறுக்கிட்டது போல, தேவன் அவ்வப்போது குறுக்கிட்டார். சோதோமியர்கள் விஷயத்தில் தேவன் வானத்திலிருந்து அக்கினியை வரவழைத்து அதை ஒரு உதாரணமாக வைத்தார். இப்படிப்பட்ட அழிவு ஒரு நல்ல நிலைமைக்கேயாகும். சோதோமியர்களின் எதிர்காலத்தை அழித்து விடாதபடி அவர்களை ஒரு உதாரணமாக வைத்தார்.

## உலக பேரரசுகள் மாபெரும் கொள்கைகளை விளக்கின

பாபிலோனியர்கள் உலகத்தை ஆளுகை செய்ய முயற்சித்த போது அவர்கள் மனுக்குலத்தின் மேல் நல்ல நோக்கத்தையும், நல்ல மனோபாவத்தையும் உடையவர்களாக இருந்தார்கள். நல்ல ஒரு அரசாங்கத்தை கொடுக்க விரும்பினார்கள். அவர்களது ஆளுகை சில காரியங்களில் அனுகூலமாக இருந்தது. அவர்களது ஜெயத்திற்கு கொஞ்சம் முன்னர் எல்லா நிகழ்வுகளிலும் ஆணவத்தை கொண்டு வந்தது. பிறகு தேவன், மேதோபெர்சிய ராஜ்யம் எழும்ப அனுமதித்தார். அவர்களுக்கு பிறகு கிரேக்கர்கள் இந்த உலகத்தை நல்ல அரசாங்கத்துடன் ஆளுகை செய்ய முயற்சித்தனர். அதன் பிறகு ரோமர்கள் வந்தனர். இந்த உலக பேரரசுகள் ஒவ்வொன்றும் அவர்களது கொஞ்சம் வெற்றிற்கு பிறகு கவிழ்க்கப்பட்டு அவர்களது முன்னேற்றம் சிதைவுற்றது.

இப்படியாக காரியங்கள் பொதுவான வழியில் செல்லவும் மனுக்குலத்தை பொதுவான எல்லைக்குள் வைத்திருக்கவும் தேவன் அனுமதித்தார். எல்லை மீறும் பொழுது, தெய்வீக திட்டத்திற்கு தடங்கள் வரும் போது அதை தடுத்தார்.

சில முறைகளில் சில முன்னேற்றம் இருந்தது. நேபுகாத்நேச்சார் புறஜாதி அரசாங்கங்களில் தலையாக, பொன்னாலான தலையாக ஆனார் என்று வேத வாக்கியங்கள் கூறுகின்றன. நேபுகாத்நேச்சர் இந்த சந்தர்ப்பத்தை பெற வேண்டும் என்று தேவன் விரும்பினதால் அவனுக்கு முன்னேற்றம் வந்தது. தேவன் அவனை அனுமதித்தால், அந்த தேசம் முன்னேறியது. இப்படியாகவே மற்ற உலக பேரரசுகளுக்கும் நடந்தது. அதை ஏற்படுத்துவதும் தள்ளுவதையும் தேவன் செய்ய வேண்டியிருந்தது. இப்படியாக உலகம் பலவிதமான அரசாங்கங்களை பெறும்படி அனுமதித்தார். இன்னொரு நிகழ்வில், இஸ்ராயேல் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து

விடுதலை அடையும் பொழுது ஒரு குறிப்பிட்ட பார்வோன் அரசாட்சியில் இருந்தான். அப்போஸ்தலர் பவுலின் பதிவின்படி, கர்த்தர் பார்வோனிடம் கூறியதாவது: "இதற்காகவே நான் உன்னை நிலை நிறுத்தினேன்." (ரோமர் 9:17; யாத்திராகமம் 9:16)

தேவன் கையாண்டு கொண்டிருந்த மாபெரும் கொள்கைகளை அந்த முறையில் விளக்குவதற்காக பார்வோனுக்கு சந்தர்ப்பம் கொடுத்தார். தேவன் பார்வோனின் மனதை கடினப்படுத்தி அவனை கெட்டவனாக்குகிறார் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இது அப்படியல்ல! அவன் சுபாவத்திலேயே அவன் ஒரு கெட்ட மனிதன். தேவன் அந்த சமயத்தில் மற்ற வாரிசுகளை விட்டுவிட்டு இந்த குறிப்பிட்ட மனிதனை ஆளுகைக்கு வரும்படி செய்தார். அந்த சமயத்தில் தேவன் அவனை அங்கே வைத்தார். அவனை தீமை செய்ய வைக்கும்படியல்ல, அவன் திருந்தாத மனம் உடையவன் என்பதை காண்பிக்கவே ஆகும்.

வாதைகள் வந்தன. "என் ஜனங்களை அனுப்பி விடு" என்று கர்த்தர் சொன்னார். ஒவ்வொரு வாதையும் வந்த பிறகு தேவனுடைய ஊழியக்காரன் மோசேயை பார்வோன் வேண்டிக்கொள்வான். வாதை நீங்கின பிறகு 'நல்லது, இதை நீ ஒன்றும் பெரிதாக செய்து விடவில்லை. எப்படியோ வாதை போய்விட்டது' என்று கூறுவான். ஆகையால் இன்னொரு வாதை வரும். எகிப்தியர்கள் மேல் இரக்கங்கொண்டு வாதையை அடிக்கடி நீக்கின தேவனுடைய இரக்கத்தை பார்வோன் அடிக்கடி விளங்கப்பண்ணினான்.

அது ஒரு பாடமாக இருந்தது. தேவன் ஒரு மனிதனில் கிரியை செய்து அவனை கெட்டவனாக்கி, தீமையானவை செய்ய பண்ணுவது அல்ல. வாதையை நீக்கும் போது, தேவனுடைய இரக்கம் மனிதனின் மனதை கடினப்படுத்துகிற ஒரு பாடம். அது இருதயத்தை மென்மையாக்குவதற்கு பதிலாக கடினப்படுத்துகிற கெட்ட பலனே ஏற்பட்டது. இதே போல அநேகர் இந்த உலகில் இருக்கிறார்கள். தேவன் அவர்களை மன்னிக்க விரும்புகிறார் என்று அவர்களுக்கு சொல்லும் போது, அவர்கள் நினைக்கிறதாவது: "நல்லது, இன்னும் நான் பாவம் செய்வேன்!" இதிலிருந்து தேவனுடைய இரக்கத்தைப் பற்றிய மாபெரும் பாடத்தையும் மனிதனோடு செயலாற்றுகிற முறையையும் நாம் கற்றுக்கொள்கிறோம். இறுதியாக கடைசி வாதை வந்தது. இதன் பிறகு கூட பார்வோனும் எகிப்தியர்களும் இஸ்ரயேலர்களை பிடிக்கச் சென்றார்கள். தொடர்ந்து வந்த எகிப்தியர்கள் சிவந்த சமுத்திரத்தில் மூழ்கியது தான் இறுதியாக நடந்தது. (யாத்திராகமம் 14:5-31)

## தேவனுடைய சித்தத்தின்படி

தற்கால அனைத்து காரியங்களிலும் தேவன் மேற்பார்வையிடுகிறார் என்று விசுவாசத்தினால் நாங்கள் நம்புகிறோம். ஆகையால் கடந்த ஜனாதிபதி தேர்தலில் நாம் ஓட்டுப்போட்ட தகுதியான வேட்பாளர் வெற்றி பெறவில்லையென்றால், அது சந்தர்ப்ப வசத்தினால் ஏற்பட்டது என்று நாம் நம்பக்கூடாது. தேவன் தேர்தலைப் பற்றிய அனைத்தையும் அறிவார் என்று நாம் கருத வேண்டும். தெய்வீக ஏற்பாட்டின்படி சில காரியங்கள் சில வழிகளில் நடக்க அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று எண்ண வேண்டும். ஆகையால் தெய்வீக ஏற்பாட்டிற்கு இசைவாக ஜனாதிபதி திரு. வில்சன் அவர்களே மிகவும் தகுதியானவராக இருந்தார்.

ஆகையால் சகலமும் தேவனுடைய சித்தத்தின்படியே நடைபெறுகிறது என்று நாம் நம்ப வேண்டும். தேவன் ஒவ்வொரு மனிதனுடைய எண்ணத்தையும், கிரியையும் தொடுகிறார் என்று நாம் நம்பக்கூடாது. ஆம், அப்படியல்ல! ஆனால் சர்ச்சை அல்லது சண்டையின், கூற்றை தெய்வீக சித்தத்திற்கு இசைவாக இருக்கும்படி ஒழுங்குபடுத்த தேவன் வல்லராயிருக்கிறார். மனிதர்களைப் பற்றிய காரியங்களைப் பொறுத்தவரை அது ஒருவரா அல்லது வேறொருவரா என்பது பற்றி தேவன் கவலைப்பட மாட்டார் என்று நாம் நிச்சயப்படுத்துகிறோம். உலகத்தை பொருத்தவரை தேவனுக்கு முன்னுரிமையோ அல்லது பிடித்தவர்களோ என்று எதுவுமேயில்லை. கொள்கைகளின் வழியில் முடிவாக எல்லாருக்கும் நன்மை பயக்கும்படி கிரியை நடப்பிக்கும்படி அவர் இயக்கி ஆளுகை செய்து கொண்டு வருகிறார்.

இப்படியாக உலகின் சகல காரியங்களும் உச்சக்கட்டத்தை அடையும்படி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். அவரை ராஜாவாக்கியோ அல்லது இவரை ராஜாவாக்கியோ அல்லது இவரை ஜனாதிபதியாக இருக்கும்படியோ அல்லது அவரை ஜானதிபதியாக இருக்கும்படி ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார். சகலமும் அவரது மாபெரும் திட்டத்திற்கு இசைவாக நடந்து கொண்டிருக்கிறது. தேவன், "இப்பிரபஞ்சத்தின் தேவனை" கீழே தள்ளுவார். சாத்தானும் அவனது ஏற்பாடுகளும் கடுமையான வீழ்த்துதலினால், மகாபெரிய தூக்கி எறிதலினால் நீக்கப்படும். தேவன் அவரது ராஜ்யத்தை ஸ்தாபிப்பார். அது மனுக்குலம் அனைத்திற்கும் ஆசீர்வாதத்தை கொண்டு வரும். அவரது ராஜ்யம் "சகல ஜாதிகளாலும் விரும்பப்படுவதாக" இருக்கும். இது மேசியா மற்றும் அவரது ராஜ்யத்தில் உடன் சுதந்தரருமாக இருக்கக்கூடிய அல்லது மணவாட்டியின் ராஜ்யமாக இருக்கும். "உம்முடைய ராஜ்யம் வருவதாக: உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூமியிலேயே செய்யப்படுவதாக" என்று இந்த ராஜ்யத்திற்காகத்தான் ஜெபித்து வருகிறோம்.

## சபை ஒழுங்கின் காரியங்கள்

கர்த்தர் விசேஷமாக அக்கறை கொண்டுள்ள அவர் விசேஷமாக வழி நடத்திக் கொண்டிருக்கிற சபைக்கு நமது தலைப்பு வசனத்தை பொருத்துவோம். அவரது ஏற்பாட்டில் இந்த அங்கங்களை சபையில் அமைக்கும்படி கிருபை செய்திருக்கிறார். "தேவன் தம் சித்தத்தின்படியே, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்." "தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும் பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்கள்" முதலானவைகளையும் ஏற்படுத்தினார். இப்படியாக கிறிஸ்துவின் சரீரத்தில் பல்வேறு நிலைகளை குறிப்பிடுகிறார். அப்போஸ்தலர் கூறுவது போல, தேவன் சரீரத்தில் அவயவங்களை வைத்தார் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். தேவனுடைய சித்தத்திற்கு இசைவாயிருக்கிற இருபது அல்லது முப்பது அல்லது முன்னூறு அல்லது ஐந்நூறு அல்லது ஆயிரம் பேர்களில் சிலரை மூப்பர்களாகவும் சிலரை உதவிக்காரர்களாகவும் வைப்பார். அவர் எப்படி அவர்களை வைப்பார்? சபையின் குரல்கள் மூலம்

சபையில் உதவிக்காரர்களாக நியமனம் பெற்றவர்கள் கர்த்தருக்கும் சகோதரர்களுக்கும் உண்மையுள்ளவர் -களாக இருக்க வேண்டும். மூப்பராக நியமனம் பெற்றவர்கள் அதை ஒரு தனிச்சலுகையாக எண்ணி, கர்த்தருக்கும் சகோதரர்களுக்கும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும். சபை பயனடையும்படியாகவும் சகோதரர்களுக்கு பிரியமாகவும் எல்லாவற்றிற்கும் மேலாக கர்த்தருக்கு பிரியமாகவும் நடக்க வேண்டும்.

எபேசு சபையின் மூப்பர்களிடம் அப்போஸ்தலர் பவுல் வார்த்தைகளை பேசும் போது கூறின கருத்து இது தான். (அப்போஸ்தலர் 20:17-38) மந்தைக்கு ஆவிக்குரிய உணவளிக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும் என்று அப்போஸ்தலர் அவர்களுக்கு கூறுகிறார். அவர் அவர்களுக்கு பலவிதமான புத்திமதிகளை சொல்லுகிறார். மேலும் தங்களது சந்தர்ப்பங்கள் மற்றும் பொறுப்புகளுக்கான கணக்கு கொடுக்கும்படி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையும் கர்த்தராலும் சகோதரர்களாலும் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர்களுக்கு புத்திமதி கூறினார்.

சில சமயம் கர்த்தரின் அனுமதியுடன், நிச்சயமாக கர்த்தரின் உத்தரவுடன் சபைகள், 'கடந்த முறை இந்த சகோதரனை மூப்பராக தேர்ந்தெடுத்தோம். ஆனால் இந்த தடவை நாங்கள் தேர்ந்தெடுக்கப் போவதில்லை' என்று கூறலாம் அல்லது அவர்கள் கடந்த முறை 'அவர் உதவிக்காரராக இருந்தார். இந்த தடவை அவரை தேர்ந்தெடுக்க மாட்டோம்; அவரை விட்டுவிடுவோம்' என்று கூறலாம். இப்படியாக விடப்பட்ட சகோதரனின் மனோபாவம் எப்படி இருக்க வேண்டும்?

### கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார்

இப்படிப்பட்ட காரியங்களில் நாங்கள் அனுபவங்களை பெற்றிருக்கிறோம். சபையார் எங்கள் திறமைகளை உணராமல் எங்களை மறுபடியும் தேர்ந்தெடுக்காமல் விட்டு விட்டார்கள். இப்படியாக தவறு செய்து விட்டார்கள் என்று எழுதப்பட்ட கடிதங்களை பெற்றிருக்கிறோம். எங்களது பதில் என்னவென்றால், இதற்கான காரணம் என்னவென்று நாங்கள் அறியோம். சபையில் ஞானமாக முடிவெடுத்தார்களா இல்லையா என்பதை நாங்கள் அறியோம். ஆனால் இது தேவனிடத்திலிருந்து வந்த தீர்மானம் என்று அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குள்ளே சொல்லிக் கொள்ள வேண்டியது என்னவென்றால், நான் சபையின் ஊழியக்காரனாக இருந்திருக்கிறேன் மற்றும் இதைக் குறித்து நான் நன்கு உணர்ந்திருக்கிறேன். அந்த உயர்வானது கர்த்தரிடத்தில் வந்தது என்றும் அந்த ஊழியமானது கர்த்தரிடத்திலிருந்து வந்தது என்றும் நான் உணர்கிறேன். ஆனால் இப்பொழுது கர்த்தருடைய வழி நடத்துதலின்படி, நான் ஒரு வருடமோ, ஆறு மாதமோ அல்லது சில காலமோ நான் கண்காணியாக இருக்கப் போவதில்லை. கர்த்தர் ஒரு வேளை நல்ல ஒரு பாடத்தை வைத்திருப்பார். ஒரு வேளை கர்த்தர் யாரை வைக்கலாம் யாரை வைக்க வேண்டாம் என்று தமது விருப்பத்தை காண்பித்திருக்கலாம். இந்த காரியத்தைக் குறித்து நான் காயமடைந்ததாகவோ அல்லது கோபம் அடைந்ததாகவோ அல்லது வருத்தம் அடைந்ததாகவோ உணராமல், நான் சொல்லப்போவது என்னவென்றால்: ஒரு வேளை நான் எனது கடமையை செய்வதில் ஒரு வேளை தவறியிருக்கலாம் என்றும் இதை தேவனிடத்திலிருந்து வந்த சிட்சை என்றும் நான் கருதுவேன். வேத வாக்கியங்கள் கூறுகிற வார்த்தைகளை நான் நினைவு கூறுகிறேன். "சகோதரர் உயர்த்தப்படும் போது சந்தோஷப்படுவானாக மற்றும் சகோதரன் தாழ்த்தப்படும் போதும் சந்தோஷப்படுவானாக." (யாக்கோபு 1:9,14) கர்த்தருடைய சித்தம் என்று சபையார் கருதுவதை அவர்கள் செய்ய சுதந்திரம் பெற்றதைக் கண்டு சந்தோஷப்படுகிறேன். எல்லா காரியங்களிலும், 'கிழக்கிலும், மேற்கிலும் வனாந்திர திசையிலுமிருந்து ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி. சபை காரியங்களில் யாரை வைக்க வேண்டும் என்று அவரே தீர்மானிப்பவர் என்பதை உணர முயற்சிப்பேன்.

**R5306**

## GRAVES OF GREEDINESS

# பேராசையின் கல்லறைகள்

எண்ணாகமம் 11:4-34

"நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது." - யாக்கோபு 5:16

இஸ்ரயேலர்கள் சீனாய் மலையில் ஏறக்குறைய ஒரு வருட காலம் தங்கியிருந்தனர். இது தயராகும் காலமாக இருந்தது. ஜனங்கள் பாடங்களை கற்றுக் கொண்டிருந்தனர். இதன் பலனால் அவர்களது புதிய நிலைமை எகிப்தை காட்டிலும் வேறாயிருந்தது. ஆசாரிப்புக் கூடாரத்தின் பாகங்கள் அங்கே செய்யப்பட்டன. அது தேவனும் ஜனங்களும் சந்திக்கும் இடமாக ஸ்தாபிக்கப்பட்டது. தேவன் அங்கே ஆசாரிப்பு கூடாரத்தின் மேல் இருந்த மேகஸ்தம்பத்தின் மூலம் பேசினார். மேகஸ்தம்பம் இரவிலே தீபந்தம் போல வெளிச்சத்தைக் கொடுத்தது.

தேவனுடைய பிரசன்னத்தை மோசே மற்றும் ஆரோன் மட்டுமே ஆசாரிப்புக் கூடாரத்தின் உள்ளே பார்த்தார்கள். இது அவர்களது ஊழியத்துடன் இணைந்ததாக இருந்தது. கிருபாசனத்தின் மேல் மகிமையான ஷெக்கினா வெளிச்சத்தின் மூலம் அவர் குறிப்பிடப்பட்டார். இப்படியாக ஆசாரிப்புக் கூடாரமானது அவர்களது தேசிய வாழ்க்கையின் மையமாகவும் அவர்களது தேவனுடனான உறவின் பாத்தியதையாகவும் ஆனது. தேவனே அவர்களது கேப்டன் மற்றும் தலைவராகவும் அவர்களது நியாயப்பிரமாண மத்தியஸ்தராகிய மோசேயின் மூலம் அவர்களுடன் தொடர்பு கொள்ளுகிறவராகவும் இருந்தார்.

ஜனங்கள் ஆட்டு மற்றும் மாட்டு மந்தைகளை உடையவர்களாக இருந்தனர். இவைகளை அவர்களது கூடாரத்திலிருந்து குறிப்பிட்ட தூரத்தில் வைக்க வேண்டியிருந்தது. பகலில் மேக ஸ்தம்பமும் இரவில்

அக்கினி ஸ்தம்பமும் கூடாரத்தின் மையத்தை குறிப்பிட்டது. அது அவர்களது சிந்தையில் தாங்கள் தேவனுடைய தத்தெடுக்கப்பட்ட பிள்ளைகள் என்பதையும் ஆபிரகாமின் கிருபையான உடன்படிக்கையின் முதலாவது உரிமையுடையவர்கள் என்பதையும் எப்பொழுதும் ஏற்படுத்தியது.

இதுபோலவே ஆவிக்குரிய இஸ்ரயேலர் தேவன் தங்களை விசேஷித்த ஜனங்களாக இருக்கும்படி உலகத்திலிருந்து அழைத்திருக்கிறார் என்று உணர்ந்து இப்படியாக கூறலாம். "தேவன் அவள் நடுவில் இருக்கிறார். அவள் கவிழ்க்கப்படுவதில்லை." நமது ஆர்வத்தின் மையம் நம் மகா பரிகாரியின் மேல் இருக்கிறது. அவர் நமக்காக மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து, உண்மையான பாவ நிவாரண பலியின் மாபெரும் வேலைகளை செய்து கொண்டிக்கிறார்.

### முறுமுறுக்கும் பாவம்

தேவனை தங்களது தலைவராகவும் வழிகாட்டியாகவும் ஏற்றுக்கொண்டு, அவருடைய ஜனங்களாக ஆனவர்கள் முறுமுறுக்கவோ, குறை கூறவோ கூடாது. அப்படி செய்பவர்கள் தெய்வீக ஞானத்தையும் வாக்குத்தத்தத்தையும் குறை கூறுபவர்கள், அந்த அளவுக்கு அவர்களது விசுவாசத்தின் உடன்படிக்கை, கீழ்ப்படிதல் மற்றும் உண்மைத்தன்மையையும் உடைக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் இஸ்ரயேலர்களின் முறுமுறுப்பு நமக்கு ஒரு பாடத்தை கூறுவதாக பரிசுத்த பவுல் நினைவுப்படுத்துகிறார். (எபிரேயர் 3:7-19 ; 4:1-11) அது நமது நிலையிலிருந்தும், நிலைப்பாட்டிலிருந்தும் பார்க்கும் பொழுது பெரியதாகவோ, சிறியதாகவோ தோன்றலாம். நீதி, அன்பு, இரக்கம், தேவனுக்கும் நியமத்திற்கும் உண்மையாயிருத்தல் ஆகியவை தெய்வீக மதிப்பீட்டில் மேன்மையான குணங்கள் என்றும் இவைகளை மீறுவது மிகவும் தீவிரமான குற்றம் என்றும் இஸ்ரயேலருடனான கர்த்தருடைய தொடர்புகள் நமக்கு காண்பிக்கின்றன. நாம் காரியங்களை இந்த வழியில் நோக்கவில்லையென்றால், நமது கருத்தை மாற்றிக்கொண்டு சர்வ வல்லவரின் கருத்தை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கர்த்தருக்கு எதிராக இந்த முறுமுறுப்பு மன்னாவைப் பற்றியதாக இருந்தது. ஏனெனில் இதைக்குறித்து ஆரம்பத்தில் அவர்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருந்தார்கள். அவர்கள் எகிப்தின் இறைச்சி பாத்திரங்களையும், பூண்டு மற்றும் இறைச்சிகளையும் நினைத்து, தங்கள் உள்ளம் வெறுப்படைய அனுமதித்து குழந்தைகளைப் போல அழுதார்கள். அவர்கள் விட்டுவந்த நிலைமையை மீண்டும் பெற விரும்பி, கர்த்தருக்கும் மோசேக்கும் எதிராக முறுமுறுத்தார்கள். உண்மையான நிலைமையை அவர்கள் அறிந்து கொள்ளவேயில்லை. அவர்கள் ஒரு வருட சுதந்தரத்திற்கு பிறகு முன்னிருந்த அடிமைத் தனத்திற்கு திரும்பியிருந்தால், எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் மிகவும் மோசமான நிலையை கண்டிருப்பார்கள்.

"தூரத்தில் உள்ள காட்சியே நம்மை வசீகரிக்கும்" என்பது இஸ்ரயேலருக்கு இருந்தது போல, நமக்கும் அடிக்கடி இருக்கிறது. அவர்கள் பின் நோக்கி பார்த்து, எகிப்தின் அடிமைத்தனத்தின் கஷ்டங்களையும் துன்பங்களையும் மறந்து விட்டார்கள். அதை நினைத்த பொழுது, தெய்வீக தலைமையின் கீழ் அவர்களது சுகங்களையும், சலுகைகளையும், சுதந்தரங்களையும் மறந்தார்கள். சிடுசிடுப்பான குழந்தைகளைப் போல, காரண காரியத்தை தெளிவாக அறியவில்லை.

### மோசேயும் கூட அதிகமாக சுமந்தார்

முறுமுறுப்பின் விளைவு மோசேயின் மேல் தீவிரமாக இருந்தது. அவர் கர்த்தருக்கு முன்பாக ஜனங்களின் பிரதிநிதியாகவும், ஜனங்களுக்கு முன்பாக கர்த்தரின் பிரதிநிதியாகவும் இருந்தார். கர்த்தருக்கு எதிராக முறுமுறுத்தது, அவர்களது அனுபவத்தில் மோசேக்கு எதிராகவும் முறுமுறுத்ததாக இருந்தது. மனம் உடைந்த அந்த தீர்க்கதரிசி, கர்த்தரிடம், தனது சுமை மிகவும் அதிகமாக இருந்தது என்றும், குழந்தைகள் ஒரு தகப்பனாரிடம் அழுகிறது போல தன்னிடம் அழுவார்கள் என்றும் இனிமேலும் தன்னால் சகிக்க முடியாது என்றும் முறையிட்டார். இந்த ஜனங்களை தம் ஜனமாக ஏற்றுக்கொண்டு ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்கு கொண்டு வருவேன் என்று கர்த்தர் வாக்குத்தத்தம் பண்ணியிருந்ததை மோசே அறிவித்தார். இந்த பாரம் என்மேல் இன்னும் இருக்க வேண்டும் என்றால் நான் செத்துப்போவது நலமாயிருக்கும் என்று வலியுறுத்தினார். "உம்முடைய கண்களில் எனக்கு கிருபை கிடைத்ததானால், இப்படி எனக்கு செய்யாமல் என் உபத்திரவத்தை காணாதபடிக்கு இப்பொழுதே என்னை கொன்று போடும் என்று வேண்டிக்கொண்டான்."

தேவன் ஜனங்களின் மூப்பரில் எழுபது பேரைக் கொண்ட யூத சனகரினை ஏற்படுத்தச் சொன்னார். அவர்கள் நியாயதிபதியாக இருந்து, அவர்கள் ஜனங்களோடு தொடர்பு கொண்டு அவர்களது முறுமுறுப்புகளை கேட்டு அவர்களுக்கு சரியானபடி ஆலோசனை சொல்லச் சொன்னார். இந்த ஏற்பாட்டில் தேவன் மோசேயை தேசத்தின் தலைவனாக கனப்படுத்தி பொறுப்பு அந்த எழுபது பேர் மேல் பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர்கள் ஏறக்குறைய ஜனங்களுடன் அவரது பாதுகாவலராக இருந்தார்கள்.

தெய்வீக வழிகாட்டுதலின்படி மோசே இந்த எழுபது மூப்பர்களை தெரிந்துகொண்டு ஆசாரிப்புக் கூடாரத்துக்கு முன்பே கூடும்படி கூறினார். அவர்களில் இரண்டு பேரைத் தவிர மற்ற அனைவரும் வந்தார்கள். அப்பொழுது தேவன் மோசேயை ஜனங்களின் தலைவராக வைத்திருந்த பொறுப்பை மற்ற எழுபது பேர் மேல் வைத்து தேவன் மோசேயின் மேல் வைத்திருந்த கனத்தை வெளிப்படுத்தினார். இது அவர்கள் அதிசயத்தக்க விதமாக தீர்க்கதரிசனம் உரைத்ததின் மூலம் குறிப்பிடப்பட்டது. இந்த தீர்க்கதரிசனம் உரைத்தலே மூப்பர்களுக்கும் அதைக் கேட்ட அனைவருக்கும் அடையாளமாக இருந்தது. பாளயத்தில் இருந்த இரண்டு பேரும் அதே சமயம் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். இப்படியாக அவர்கள் மோசேயுடனும் அவருக்கு கீழாகவும் இருந்து ஜனங்களை வழி நடத்துவதிலும், வழி காட்டுதலிலும் உடன் ஊழியர்களாக இருக்கும்படி தேவன் அறிவித்தார்.

## காடைகளின் அபரிமிதமாக விநியோகம்

தேவன் இஸ்ரயேலர்களுக்கு மோசே மூலம், ஒரு வேளை அனைத்து பல்வேறு கோத்திரங்களிலிருந்து தெரிந்துகொள்ளப்பட்ட மூப்பர்கள் மூலமாக, அவர்கள் முறுமுறுத்த மாமிச உணவை கொடுக்க போவது குறித்து செய்தி அனுப்பினார். சகல ஜனங்களுக்கும் முப்பது நாட்களுக்கு அவர் அனுப்புவதாக அறிவித்தார். மோசேயும் ஆச்சரியத்துடன், எனினும் நம்பிக்கையுடன் செய்தியை அனுப்பினார். தேவ பராமரிப்பின் கீழ் சிவந்த சமுத்திரத்திலிருந்து வந்த காற்று ஆயிரக்கணக்கான காடைகளை அடித்துக் கொண்டு வந்து இஸ்ரயேலர்களின் பாளயத்தைச் சுற்றிலும் அருகிலே குறிப்பிட்ட தூரம் வரை போட்டது. அதன் பலனால் கர்த்தர் கூறினது போல முப்பது நாட்களுக்குப் போதுமான காடைகளை சேர்த்து வைத்து புசித்தார்கள். இரண்டு நாட்கள் இரவும் பகலும் காடையை சேர்த்தார்கள்.

சில அஞ்ஞானவாதிகள் காடைகள் தரையிலிருந்து இரண்டு முழத்திற்கு விழுந்து கிடந்தது என்று நினைத்து அறிவிப்பை சந்தேகிக்கின்றனர். உண்மையான காரியம் என்னவென்றால் காடைகள் சிவந்த சமுத்திரம் முழுவதும் பறந்து வந்ததால் அவைகள் களைப்படைந்து தரையிலிருந்து இரண்டு முழ உயரத்திற்கு பறந்ததால் அதை கைகளால் பிடிப்பதும் குச்சியினால் அடித்துப் பிடிப்பதும் சுலபமாக இருந்தது என்பதே. அந்த அருகாமையை குறித்து ஒரு எழுத்தாளர் கூறுகிறதாவது:

"இந்த காடைகள் அதிக தூரம் பறக்கும் பொழுது களைப்பினால் விழாமல் இருக்க முடியாது. அவைகள் தரையிலிருந்து இரண்டு முழ மூன்று அடி உயரத்தில் பறக்கும் பொழுது அவைகளை சுலபமாக பிடித்து விடலாம்."

திருப்தியில்லாமல் முறுமுறுத்தவர்களுக்கு உடனே இறைச்சி உணவைப் பெற்றார்கள். அவர்கள் பேராசையுடன் அதிகப்படியாக உண்டதால் ஒரு காய்ச்சல் ஒரு கொள்ளை நோய் வந்தது. அது தேவ கோபம் என்று அழைக்கப்பட்டது. மரித்த ஜனங்களை அங்கே அடக்கம் பண்ணினார்கள். அந்த இடத்திற்கு "கிப்ரோத் அத்தாவா" என்று பெயரிட்டார்கள். அதற்கு "பேராசையின் கல்லறை" என்று அர்த்தம். இப்படியாக நன்றியில்லாமல் முறுமுறுத்தார்கள். இனி மேல் முறுமுறுக்க சந்தர்ப்பம் இராமல், தங்களையே அழித்துக் கொள்ளும்படி கர்த்தர் அனுமதித்தார்.

தேவனுடைய ஏற்பாடுகளிலும் கொடுக்கலிலும் திருப்தியடைகின்ற, தேவனிடத்தில் நம்பிக்கையுள்ள சிந்தையே மிகவும் சந்தோஷமானதாகவும் முழுதும் ஓய்வுள்ளதாகவும் இருக்கும். இது ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு, குறிப்பாக ராஜரீக ஆசாரியருக்கு பொருத்தமானதாக இருக்கும். இவர்கள் கர்த்தரிடம் முழு அர்ப்பணத்தையும், பூமிக்குரிய உரிமைகளையும் விருப்பங்களையும் உள்ளடக்கிய பலியின் உடன்படிக்கையையும் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆவியுடனும் புரிந்து கொள்ளுதலுடன் இப்படியாக சந்தோஷத்துடன் பாடலாம்:

"ஏராளமான எதைப்பார்த்தாலும் நான் திருப்தி அடைவேனாக. ஏனெனில் என் தேவன் என்னை நடத்துகிறார்."

அதிருப்தியின் ஆவி, தேவன் அருளிய பரலோக மன்னாவை விட்டு, அவர்களது சொந்த உணவை அல்லது மற்ற பூமியின் உணவை விரும்புகிறது. அவர்கள் விரும்புகிறதை முழு விருந்தாக கர்த்தர் கொடுக்கிறார். இதன் பலனால் முறுமுறுக்கிறவர்கள் தேவனுடைய சபையின் அங்கத்திலிருந்து நீக்கப்பட்டு, தேவன் அருளுகிற போதுமான மன்னாவில் பங்குபெறும் சந்தர்ப்பத்தை இழப்பார்கள்.

விளக்கம் கொடுப்பதற்கு: வேதாகமமானது தெய்வீக சத்தியத்தின் மன்னாவை வழங்குகிறது. சத்தியம் சேர்க்கப்பட்டு அரைக்கப்பட்டு, சுடப்பட வேண்டும். ஆனால் அது தேவன் அருளியது. அது முழுமையான, சத்தானது. தேவனுடைய பிள்ளைகளாகிய நம்மை பலப்படுத்துவதற்கும் பூரணப்படுத்துவதற்கும் இது மிகவும் தேவையானதாக இருக்கிறது. எனினும் சிலர் எகிப்தின் இறைச்சி பாத்திரத்துக்கு ஏங்குகிறார்கள். அதாவது உலக தத்துவத்தை விரும்புகிறார்கள். பிறகு அவைகள் தங்கள் அருகே வரும்படி அனுமதிக்கிறார்கள். விமர்சகர்கள் மற்றும் பரிணாம வளர்ச்சியின் கொள்கைகளால் தங்களை நிரப்பிக்கொள்ளுகிறார்கள். அதன் பலனால் புது சிருஷ்டியை அழிக்கிறார்கள். தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதையும் ஆண்டவரின் அடிச்சுவட்டில் நடக்கிறதையும் நிறுத்துகிறார்கள். அவர்கள் உண்டாக்கின தப்பிதங்களினால் அவர்கள் அக்கினி அல்லது ஜுரத்தினால் விழுங்கப்படுகிறார்கள்.

## பேராசையின் கல்லறைகள்

பேராசை, சுயநலம் ஆகியவை பாவத்தின் ஒவ்வொரு வகையோடு இணைந்திருக்கிறது. அது தன் சுய முன்கணிப்புகளை திருப்திப்படுத்த சாகாமையின் ஒவ்வொரு வகைக்கும் வழி நடத்துகிறது. தேவனுடைய ஆசீர்வாதங்களில் அதிகமான பங்கை அடையும்படிக்கு அதன் முயற்சிகளில் அது அநீதிக்கும் உண்மையற்ற தன்மைக்கும் நடத்துகிறது. அது உலகின் நன்மைகளில் அதிக பங்கை பெறவும் பற்றிக்கொள்ளவும் செய்யும் முயற்சியுமாகிய அது கோபம், வன்மம், பகைகள், பொறாமை, சண்டை மற்றும் கொலைக்கு வழிநடத்துகிறது. இப்படியாக சுயநலம் அநீதியாகவும், "அநீதியெல்லாம் பாவமாகவும்" இருக்கிறது.

இஸ்ரயேலரை நிரப்பியிருந்த பேராசையைப் பற்றி நினைக்கும் பொழுது, எவ்வளவு ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் இதே போன்ற தவறுகளை செய்கிறார்கள் என்று நாம் ஞாபகப்படுத்தப்படுகிறோம். உலக காரியங்களில் பேராசை கர்த்தருடனான உடன்படிக்கையும், வரக்கூடிய வாழ்க்கையில் அதிக விருப்பத்தையும் புறக்கணிக்கும்படி செய்கிறது. கோதுமையிடையே முளைத்தெழும்புகிற முட்கள் அமுக்குவது இந்த வாழ்க்கையின் அக்கறை மற்றும் செல்வத்தின் ஆசையுமாகும் அதாவது பேராசை என்று இயேசு சொன்னார்.

ஓ, சகல இயேசுவின் சீஷர்களும் இந்த உலகின் ஆவியிலிருந்து எந்த அளவுக்கு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்! தற்கால வாழ்க்கையின் சுகங்கள் மற்றும் ஆசீர்வாதங்களின் சரியான பங்கை பெற யாரும் முயற்சிக்கக்கூடாது என்று நாங்கள் சொல்லவில்லை. அதன் ஆபத்து என்னவென்றால் இந்த காரியங்களில் நமது இருதயத்தை வைப்பது, ஒரு விக்கிர ஆராதனை முறையில் அவைகளில் ஆசைப்பட்டு, சேவிப்பது ஆகும். இப்படியாக நமது ஆவிக்குரிய குறுக்கீடுகளை ஏற்படுத்தி "பேராசையின் கல்லறைகள்" என்று நன்றாக பொறிக்கப்படும்.

## நமது பாடத்தின் மூல வாக்கியம்

நமது தலைப்பு வசனம், உதவிக்காகவும் துயர் நீக்கவும் மோசேயின் ஜெபத்தை உபயோகிக்கவேயாகும். "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாக இருக்கிறது." மோசே சரியான முறையில் உதவியை கேட்ட அவரது வேண்டுதலை தேவன் கேட்டார். இதன் மூலம் தேவனுடைய சித்தத்திற்கு ஜனங்கள் முற்றிலும் ஒப்புக் கொடுக்கவும், தெய்வீக ஏற்பாடுகளுக்கு முற்றிலும் தலைவணங்கும்படியும் போதிக்கலாம். அது அதிகமாக பயன்படுத்தப்பட்டது, அது எதிர்பார்த்த பலனை தந்தது; அது தேவனுடைய சித்தத்திற்கு இசைவாயிருந்தது.

இன்னொரு வகையில், அநீதிமானின் ஜெபம் எதிர் திசையில் பயன்படுத்தப்படும். ஜனங்களின் முறுமுறுப்பு அவர்களது ஜெபங்களைப்போல வகைப்படுத்தப்படும். அவர்கள் விரும்பினதைப் பெற்றார்கள். இத்துடன் அவர்கள் தெய்வீக ஆசீர்வாதத்தை அல்ல. தண்டனையை பெற்றார்கள். நாம் எப்படி ஜெபம் பண்ணுகிறோம். தேவனுடைய சித்தத்திற்கு இசைவாக ஜெபிக்கிறோமா என்பதை நாம் கவனிக்க வேண்டும். இப்படியாக நமது ஜெபம் நம் தலையின் மேல் ஆசீர்வாதத்தைக் கொண்டு வர வேண்டும், காயத்தை அல்ல.

## சுயநலமான ஜெபங்கள் கேட்கப்படுகின்றன

அநேக ஜெபங்கள் கேட்கப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். இவைகளில் சில முற்றிலுமாக சுயநலமானது. தேவனுடைய சித்தத்தை அறியவும் அதை செய்யவும் அல்ல, மனிதனுடைய சுயநல விருப்பத்தையும் மனிதனுடைய சித்தத்துக்கு ஏற்ப தேவன் கேட்க வேண்டும் என்ற விருப்பத்தோடு ஆகும். இப்படிப்பட்ட ஜெபம் எப்பொழுதும் ஆபத்தானது. சில சமயங்களில் தேவன் அவர்களுக்கு பதிலளிக்கிறார்.

ஒரு தாய் சொன்ன ஒரு நிகழ்வை இங்கே குறிப்பிடுகிறோம். அவள் ஒரு உண்மையான கிறிஸ்தவ பெண். அவள் தன் மகனை கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்திருந்தாள். ஆனால் அவன் மிகவும் வியாதிப்பட்டு மரண வாசலில் நின்றான். மருத்துவர் அவனை குணப்படுத்த முடியாது என கை விரித்து விட்டார். ஆனால் அவள் கர்த்தரிடம் ஊக்கமாக ஜெபித்தாள். ஆனால் தேவனுடைய சித்தம் செய்யப்பட வேண்டும் என்றல்ல. தன்னுடைய சித்தம் நிறைவேற வேண்டும் என்றும் தனது மகனுடைய ஜீவன் காக்கப்பட வேண்டும் என்றும் விண்ணப்பம் செய்தாள். அதிசயதக்க விதமாக அவளது மகன் குணமடைய ஆரம்பித்தான் என்று கூறுகிறாள். அவள் வெற்றிக் கொண்டாள் என்று கொஞ்ச காலம் களிகூர்ந்தாள்.

எனினும் பிற்காலத்தில் ஒரு கசப்பான பாடத்தை கற்றுக் கொண்டாள். அவளது மகன் பெரியவனானான். ஆனால் அவன் அவளை கவனிக்கவில்லை. அவன் துஷ்ட குணமுடையவனாக இருந்தான். இது அவளுக்கு கண்ணீரையும் வலியையும் உண்டாக்கியது. அவள் பிறகு கூறியதாவது: "அந்த ஜெபம் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக இருந்தது. ஆனால் எனது சித்தத்தின்படி தேவன் எனக்கு பதிலளித்தார். நான் நன்றாக காண்கிறேன். எனது பாடத்தை கற்றுக் -கொண்டிருக்கிறேன். இது முதல் தேவனுடைய சித்தத்தை அறிய நாடி, என்னுடைய எல்லா காரியங்களிலும் எனது சித்தத்தின்படியல்ல, அவருடைய சித்தத்தின்படியே நடக்கும்படி ஜெபிப்பேன். என்னுடைய சுயநலம் வருடக்கணக்கான துன்பத்தைக் கொண்டு வந்தது. அது சுகமான மற்றும் சந்தோஷமான காலமாக இருக்கும் என்று எதிர்பார்த்தேன்." நாம் "அவரிலும் அவருடைய வார்த்தையிலும் நிலைத்திருக்க" நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்!

## அறுவடை அழைப்பு

வாருங்கள், வேலை செய்யுங்கள்.

அறுவடை வயலில் சும்மா நிற்க யாருக்கு தைரியம் இருக்கும்;

அவனை சுற்றியுள்ள அனைவரும் பொன்னிற மணிகளை அசைக்கும் பொழுது,

ஒவ்வொரு வேலைக்காரரும் கேட்க எஜமானன் கூறுகிறதாவது,

"போய் இன்றைக்கு வேலை செய்யுங்கள்.!"

வாருங்கள், வேலை செய்யுங்கள்

வேலையாட்களோ குறைவு, அறுவடையோ அதிகம்;

உரிமைக்காக உழைக்கிறவர்களுக்கு ஓய்வு என்பதே இல்லை;

தூரத்திலிருந்தோ அல்லது வீட்டிற்கு அருகேயிருந்தோ சத்தம்.

அழைப்பு, "வாருங்கள்" என்பதே.

வாருங்கள், வேலை செய்யுங்கள்.

மேற்கே வானத்தில் ஒளி வீசும்வரை ஓய்வெடுக்க நேரமில்லை,

நமது பாதையில் நீண்ட நிழல் விழுகிறது;

சூரியன் மறையும் பொழுது சந்தோஷமான சத்தம் வருகிறது;

"ஊழியக்காரரே, நன்றாய் செய்தீர்கள்!"

வாருங்கள், வேலை செய்யுங்கள்.

உழைப்பு சந்தோஷம், பரிசு நிச்சயம்;

முடிவு வரை சகிப்பவர்களே பாக்கியவான்கள்;

அவர்களது சந்தோஷம் எவ்வளவு நிறைவானது,

அவர்களது ஓய்வு எவ்வளவு ஆழமானது

ஓ கர்த்தாவே, உம்முடன்!

---

ஏழாம் சபையின் தூதனாகிய
சகோ. C.T. **ரசல்** அவர்களின் ரீ-பிரிண்ட்ஸின் தமிழாக்கத்தை வெளியிடுகிறோம்.

வெளியிடுபவர் :
சகோ. R. **செல்வராஜ்,** சென்னை வேதமாணவர் சபை
எண். 22, முதல் தெரு,ராஜீவ் நகர், காலடிப்பேட்டை, திருவொற்றியூர், சென்னை-600 019.
கைபேசி : 97909 00030, மின்னஞ்சல் : mbsa_selvaraj@rediffmail.com
Website : www.thestudiesinthescriptures.com
**FOR PRIVATE CIRCULATION ONLY**